# திறவுகோல்

**2050 கார்த்திகை**
**மாத இதழ்**

ஆசிரியரின்றி அமையுமா கல்வி?

ராமனின் பயணம்

நிலநடுக்கமும் கட்டுமான விளம்பரமும்

Schedule - J 51

செண்பக வனம்

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# ஆசிரியரின்றி அமையுமா கல்வி?

தமிழ்நாட்டில் அரசு, அரசு நிதியுதவி, சுயநிதிப் பள்ளிகள் என 44214 தொடக்க, நடுநிலைப் பள்ளிகளும் 8949 உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இதில் மொத்தம் 14 லட்சத்து 88 ஆயிரத்து 235 மாணவர்கள் தொடக்கக் கல்வி பயில்கின்றனர். ஒரு பள்ளிக்கான சராசரி மாணவர்களின் எண்ணிக்கை 61.88 சதவீதம் ஆகும்.

அதேபோல, தமிழகத்தில் மொத்தம் தனியார் சார்பில் 6,202 நர்சரி, பிரைமரிப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் 7 லட்சத்து 65 ஆயிரத்து 279 மாணவர்கள் படிக்கின்றனர். இந்தப் பள்ளிகளில், ஒரு பள்ளிக்கான மாணவர்களின் சராசரி எண்ணிக்கை 123.39 சதவீதம் ஆகும். இதேபோல தமிழகம் முழுவதும் உள்ள 3,046 அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 6 லட்சத்து 53 ஆயிரத்து 631 மாணவர்கள் படிக்கின்றனர். ஒரு பள்ளிக்கான மாணவர்களின் சராசரி 214.58 ஆக உள்ளது.

அதேவேளையில் 1,955 தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் 8 லட்சத்து 40 ஆயிரத்து 835 மாணவர்கள் படிக்கின்றனர். ஒரு பள்ளியில் சராசரியாக 430 மாணவர்கள் பயில்கின்றனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அரசுப் பள்ளிகளில் அதிகமான பள்ளிகளில் குறைந்த மாணவர்கள் படிக்கிறார்கள் எனவும், தனியார் பள்ளிகளில் குறைந்த பள்ளிகளில் அதிக அளவு மாணவர்கள் படிக்கிறார்கள் எனவும் தெரியவந்துள்ளது.

இவற்றை ஒப்புநோக்கும்போது அரசு பள்ளிகளை விட தனியார் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை 2 மடங்கு அதிகரித்துக் காணப்படுகிறது. பள்ளிக் கல்வித் துறை சார்பில் தமிழகத்தில் உள்ள பள்ளிகள், மாணவர்கள், ஆசிரியர்களின் எண்ணிக்கை ஆகியவற்றில் செய்யப்பட்ட பதிவுகளின்படி நடத்தப்பட்ட ஆய்வில் இது தெரியவந்துள்ளது.

இந்தப் புள்ளிவிவரங்களின்படி, தமிழகத்தில் மொத்தமுள்ள 57,208 பள்ளிகளில் 1 கோடியே 31 லட்சத்து 93 ஆயிரத்து 950 மாணவர்கள் படிக்கின்றனர். இந்தப் பள்ளிகளில் 5 லட்சத்து 42 ஆயிரத்து 743 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். 37,141 அரசுப் பள்ளிகளில் 55 லட்சத்து 40 ஆயிரத்து 425 மாணவர்கள் படிக்கின்றனர். 8,409 அரசு உதவி பெறும் பள்ளிகளில் 29 லட்சத்து 98 ஆயிரத்து 255 மாணவர்களும், 11,658 தனியார் பள்ளிகளில் 46 லட்சத்து 55 ஆயிரத்து 270 மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

இவற்றிற்கு அடிப்படைக் காரணங்களாக, கல்வியில் அரசின் தனியார்மய ஊக்குவிப்புகளும் சாமானிய மக்களிடையே திணிக்கப்பட்ட ஆங்கில வழிக்கல்வி

மீதான மோகமும் அரசுப் பள்ளிகள் மீதான அவநம்பிக்கைகளும் உள்ளன. எனினும், ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட மற்றும் விளிம்பு நிலை மக்களின் புகலிடங்களாக இன்றுவரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளே திகழ்ந்து வருகின்றன. மேலும், அங்கு பணிபுரியும் ஆசிரியர் பெருமக்களின் அயராத உழைப்பின் விளைவாக அரசுப் பொதுத் தேர்வுகளில் சராசரியாக 75 சதவீத அடைவை ஆண்டுதோறும் உறுதிப்படுத்திக் கொண்டு வருவது அறிந்ததே.

மத்திய, மாநில அரசுகள் பள்ளிக் கட்டமைப்புகளை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்திய போதும் இன்னும் எத்தனையோ கிராமப்புற பள்ளிகள் அடிப்படை வசதிகளின்றிக் காணப்படுவது வேதனை தரும் சேதியாகும்.

அத்தகைய பள்ளிகளில் பணிபுரியும் பெண் ஆசிரியைகள் மற்றும் பதின்பருவ மாணவிகள் படும் இன்னல்கள் சொல்லவொணாதவையாக இருக்கின்றன. மேலும், கிராமப்புறங்களில் 2001 ஆம் ஆண்டில் மத்திய மனித வள மேம்பாட்டுத் துறையின்கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட அனைவருக்கும் கல்வித் திட்டம் காரணமாக, ஒரு கி.மீ. தொலைவில் தொடக்கப் பள்ளிகளும், மூன்று கி.மீ. தொலைவிற்குள் உயர்தொடக்கப் பள்ளிகளும், ஐந்து கி.மீ. தொலைவிற்குள் உயர்நிலைப் பள்ளிகளும் தோற்றுவிக்கப்பட்டன. தவிர, இப்பள்ளிகளுக்குப் பாட வாரியாக பல்லாயிரக்கணக்கில் உயர்தகுதிகள் பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

அதன்பின் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆசிரியர் தகுதித் தேர்வு முறையாலும் இலவசக் கட்டாய தரமான கல்வி அனைவருக்கும் தொடர்ந்து கிடைக்கப்பெற்று வந்தது. அறிவியல், கணிதம், சமூக அறிவியல் மற்றும் ஆங்கிலப் பாடத் திறன்கள் இவற்றால் மாணாக்கரிடம் கூடின. இதன்விளைவாக, கிராம மற்றும் நகர்ப்புற அடித்தட்டு மக்களின் பிள்ளைகள் பொறியியல் மற்றும் மருத்துவம் உள்ளிட்ட உயர்கல்வியில் உயர்ந்து விளங்கும் நல்ல சூழல்கள் உருவாயின. அவர்களின் வாழ்க்கை முறையிலும் சிறந்ததொரு மாற்றம் ஏற்பட்டது.

இத்தகைய சூழலில், கல்வி மீதான அரசின் நோக்கும் போக்கும் அண்மைக்காலமாக உலகமயமாக்கல் மற்றும் தனியார் மயமாக்கல் நெருக்கடிகள் காரணமாக மாறிவருவது வருந்தத்தக்கது. கல்வியை எதிர்காலத்திற்கான கட்டாய முதலீட்டு அத்தியாவசிய செலவு என்று எண்ணாமல் துரித வளர்ச்சிக்கு உதவாத வீண் அநாவசிய செலவு என்று பரப்புரை செய்யப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக, பெருவணிகத்தை அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு விளங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் புற்றீசல்களாகப் பெருக மறைமுகமாகப் பச்சைக்கொடி காட்டுவதில் அரசு அக்கறைக் காட்டத் தொடங்கியுள்ளதோ என்னும் ஐயப்பாடு எழுந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஏனெனில், குறைந்த மாணவர் எண்ணிக்கை கொண்ட அரசுப் பள்ளிகள் மூடப்படும் என்றும் ஆசிரியர் மாணவர்

விகிதத்திற்கேற்ப ஆசிரியர் பணியிடங்கள் பணிநிரவல் செய்யப்படும் என்றும் இருவேறு அபாய அறிவிப்புகள் துரிதகதியில் வெளியிடப்பெற்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு தரப்பினரும் தெரிவித்த எதிர்ப்பு காரணமாக, பள்ளிகளுக்கு மூடுவிழா நிகழ்வுகள் ஆமை வேகத்தில் நிகழ அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளையில், பல்லாயிரக்கணக்கான ஆசிரியர் பணியிட ஒழிப்பில் பள்ளிக்கல்வித் துறை அதீத வேகம் காட்டி ஆட்குறைப்பு நடவடிக்கையினை இப்போதே தொடங்கி விட்டது. மாவட்டம் முழுவதும் அனைத்து விதமான பள்ளிகளிலும் பணிபுரிந்து வரும் நிரந்தர, நிலையான ஆசிரியர் பணியிடங்களை ஆசிரியருடன் உபரிப் பணியிடங்களாக மாற்றி தற்போது நடைபெற்ற பொதுமாறுதல் கலந்தாய்வில் ஆணை பிறப்பித்துள்ளது தக்க சான்றாகும்.

மேலும், இனிவரும் காலங்களில் ஏற்படும் காலிப் பணியிடங்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்பட மாட்டாது எனவும் அப்பணியிடங்களை பட்டியலிலுள்ள உபரி ஆசிரியர்களைக் கொண்டே நிரப்பப்படும் எனவும் கூறியிருப்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயல் எனலாம். இந்நடவடிக்கை மூலமாக மாநிலம் முழுவதிலுமுள்ள பள்ளிகளில் காணப்படும் இலட்சக்கணக்கான ஆசிரியர் பணியிடங்கள் ஒழிக்கப்படுவதுடன் ஆசிரியப் பணி வேலைவாய்ப்புக் கனவானது எதிர்கால தலைமுறையினரிடத்துக் கானல் நீர் போலாகிவிடும்.

இதுதவிர, புதிய பாடத்திட்டங்கள் மற்றும் கற்பித்தல் முறைகள் சம்பந்தப்பட்ட தகுதியும் திறமையும் கொண்ட ஆசிரியர்களுக்கு அறைகூவல் விடுக்கும் விதமாக இருப்பது மறுப்பதற்கில்லை. இந்நிலையில், பணியிட ஒழிப்பால் ஏற்பட்ட பாட வெற்றிடத்தை பாட சம்பந்தமற்ற ஆசிரியரைக் கட்டாயப்படுத்திக் கற்பிக்க அறிவுறுத்துவது என்பது நல்லறமாகா. வேறுவழியின்றி ஒப்புக்குக் கற்பித்தல் நிகழ்ந்தாலும் மாணவர்கள் கற்றலை முழுமையாக அடைவுபெறுவார்களா என்பது கேள்விக்குறியே.

இதன்மூலம் ஏழை, எளிய, பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய சமூகத்தினரின் பிள்ளைகளுக்கான இலவச கட்டாய தரமான கல்வி கிடைப்பதில் ஊறு நேர அதிகம் வாய்ப்புண்டு. ஆசிரியர் இன்றி அமையாது கல்வி என்பதை அனைவரும் ஆழ்ந்து புரிந்து கொள்ளுதல் நலம்.

மேலும், ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக பொதுமக்களிடையே அரசுப் பள்ளிகள் மீதான நாட்டமும் அக்கறையும் வெகுவாகக் குறையும். பள்ளி அடிப்படை வசதிகளில் குறிப்பிடத்தக்க தன்னிறைவும் பாடத்திற்கு அல்லது வகுப்பிற்கு ஓராசிரியர் என்கிற தற்போதைய நிலையில்கூட போதிய மாணவர் சேர்க்கையின்மையால் நடப்பில் பல்வேறு அரசுப்பள்ளிகள் கவலைக்கிடமாகக் காணப்படுகின்றன.

கடந்த சில ஆண்டுகளாகவே அரசுப் பள்ளிகளில் படித்த, பணியிலுள்ள, நடுத்தர வர்க்கத்தினர் தம் பிள்ளைகளையும் அரசுப் பள்ளிகளில் சேர்க்காமல் தொடர்ந்து புறக்கணித்து வரும் போக்குகள் அவை நலிவடைவதற்கு முக்கியக் காரணங்களாக அமைந்துள்ளன. இதனால், மாணவர் விகிதம் வெகுவாக வீழ்ச்சியுற்று ஆசிரியர் பணியிடக் குறைப்பிற்கு வழிகோலுகிறது. அரசும் அதற்கேற்ப ஆசிரியர் மாணவர் விகிதம் 1:20 என்பதிலிருந்து உயர்த்தி 1:30 என்று நிர்ணயம் செய்துள்ளதும் இங்கு நோக்கத்தக்கது.

மேலும், தனியார் பள்ளிகளில் கட்டாயம் கடைபிடிக்க வலியுறுத்தும் 25 சதவீதத்திற்கும் மிகுதியாக அரசுக் கட்டண சேர்க்கையில் அரசுப் பள்ளிகளில் பயின்று சிறப்பிடம் பெற்ற மாணவர்களை தன்வயப்படுத்திக் கொள்ளுதல் என்பது ஏற்கத்தக்கதல்ல. இது தனியார் பள்ளிகளை நேரடியாக ஊக்குவிக்கும் கொடும்செயலாகும். இத்தகு நடவடிக்கைக்கு ஈடாக அரசுப் பள்ளிகளின் உள்கட்டமைப்புகளை மேலும் வலுவுடையதாக்கி, போதுமான ஆசிரியர் பணியிடங்களை நிரப்பி வளப்படுத்துதல் என்பது பாராட்டத்தக்க செயல் ஆகும்.

கல்விக்கு ஆகும் செலவுகளை ஈடுகட்ட வரி வருவாயில் திரட்டப்படும் மூன்று சதவீத கல்வி வரி போதுமானது. பள்ளியின் அடிப்படைக் கட்டமைப்புகளை அதன்மூலம் உருவாக்கும் முயற்சியில் ஆசிரியர் பணியிடங்களும் அடங்குதல் நல்லது. கற்றலுக்கான உந்துவிசை வெறும் கட்டடங்கள் அல்ல. ஆசிரியர்களே ஆவர்.

அதுபோல், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இல்லாமல் மூடப்படும் அரசுப் பள்ளிகளின் மரணம் என்பது மீளவும் கல்வி எட்டாக்கனியாக மாறிடும் அவலநிலைக்கே இட்டுச்செல்லும். இதில் எல்லோருக்கும் பங்குண்டு. அடித்தட்டு மக்களின் எதிர்கால சந்ததியினர் கட்டணம் செலுத்திக் கல்வி கற்க வழியின்றி வாழ வக்கற்றவர்களாக ஆகிடும் கொடுமை தவிர்க்க இயலாத ஒன்றாக விளங்கும். அப்போது அனைவருக்கும் கல்வி என்பது வெற்று முழக்கமாக இருக்கும்.

இந்த இழிநிலைகளைக் களைந்து அரசுப் பள்ளிகளையும் ஆசிரியர் பணியிடங்களையும் காத்து அடிப்படைப் பிறப்புரிமையான கல்வி எல்லோருக்கும் எளிதாகவும் விலையில்லாமலும் கிடைத்திடச் செய்வதில் தொலைநோக்குடன் அரசும் பொதுமக்களும் நல்லெண்ணத்துடன் முன்வருவதென்பது மெய்யான நாட்டு நலப்பணியாகும். அதுபோல, பள்ளியில் அச்சாணிகளாகத் திகழும் ஆசிரியர்களின் பணியிடப் பாதுகாப்பு ஒன்றே அரசுப் பள்ளிகளை அழிவிலிருந்து மீட்கும் என்பது திண்ணம்.

**- முனைவர் மணி கணேசன்**
அழைக்க: 9442965431

# ராமனின் பயணம்



ரா. ராஜராஜன்
மன்னார்குடி

இந்தியா, பாகிஸ்தானின் பிரதிபிம்பம் கிடையாது. அது இஸ்லாமிய தேசம் என்பதற்காக நாம் இந்து தேசம் போல் நடந்துகொள்ள முடியாது. நம்மின் மதச்சார்பின்மை கொள்கைகள் இஸ்லாமிய குடிமக்களை நாம் பொறுப்புணர்வுடன் நடத்த வேண்டும் என்பதை நமக்கு கட்டாயமாக்குகிறது. பெரும்பான்மை, சிறும்பான்மை அற்று மதசார்பினை தான் நமக்கான அடையாளம். அவ்வாறாக தான் நம்முடைய அரசியலமைப்பின் அடிப்படையும் வரையறுக்கப்பட்டுள்ளது.

- ஜவாஹர்லால் நேரு -

பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலிருந்து இங்கு நீதிமன்ற வழக்காடுகளிலும் தீர்ப்புகளிலும் "courts of law, not courts of justice" என்ற வாதத்தை வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் தெரிவிப்பார்கள். அது என்னவெனில் ஓர் வழக்கில் தவறு நடந்துள்ளது தெரிந்திருந்தும் அதற்கு தேவையான ஆதாரமோ அல்லது சட்டமோ இல்லாத பொழுது தவறிழைத்தவர்களுக்கு சாதகமாக தீர்ப்பை வழங்குவார்கள். அதற்க்கு அவர்கள் கூறும் சமாதானம் தான் "courts of law, not courts of justice". ஆனால் இந்த அயோத்தி வழக்கை பொறுத்தவரை நீதிமன்றத்தின் தீர்ப்பானது "courts of law, not courts of justice" என்பதையும் தாண்டி "courts of hindutva" என்பதாக உள்ளது. இன்று, நேற்றல்ல, இப்பிரச்சனை ஆரம்பிக்கப்பட்ட காலம்தொட்டே ஓர் சார்பாக தான் பெருவாரியான நடவடிக்கைகள் இருந்துள்ளது, குறிப்பாக பெரும்பான்மையினர் சார்பாக.

இந்தியா ஓர் மதசார்பற்ற நாடு, வேற்றுமையில் ஒற்றுமை என்பது தான் இந்தியாவின் தனிச்சிறப்பு, உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு என்றெல்லாம் மார்தட்டிக் கொள்ளும் இந்நாட்டில் தான் இப்படி நீதி என்பது பெரும்பான்மையினரின் உரிமை என்பதாக இந்நாட்டின் உச்ச பரிபாலன அமைப்பான உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ளது. இல்லை, உறுதி செய்யவைக்கப்பட்டுள்ளது. இந்த இந்து அரசு இதை தான் செய்யும் என்பதை நாம் அறிந்தது தான், அதே வேளையில் நம் மக்கள் இதனை கொண்டாடுகிறார்கள் அல்லது ஏற்று கடந்து செல்கிறார்கள் என்பதை நாம் எவ்வாறு புரிந்துகொள்வது. மக்களுக்கு இந்த மனநிலை எப்படி வந்தது. இதை பகுத்து பார்த்தால் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக மக்களை உளவியல் ரீதியாக தயார்படுத்தியிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. இந்த நிகழ்வுகளில் தெரிந்தோ தெரியாமலோ பலர் பங்கெடுத்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

கோயஸ் தியரியின் பட்டாம்பூச்சி விளைவை போல் இந்த ராமர்கோவில் விடயம் மக்கள் மனதில் பதிய வைக்கப்பட்டுள்ளது. காந்தியின் ஓர் வார்த்தை, குடும்பக்கட்டுப்பாடு திட்டம், ஷாபானு விவாகரத்து வழக்கு, தொலைக்காட்சி, தொலைக்காட்சி தொடர் என ஒவ்வொரு காலகட்டத்திலும் நடந்த ஒவ்வொரு நிகழ்வுகளின் பின்னாலும் இந்த ராமர்கோவில் கருத்தாக்கம் விதைக்கப்பட்டுள்ளது. இது நம்மை அறியாமலே நம்முள் விதைக்கப்பட்டுள்ளது. அதனால் தான் இந்த தீர்ப்பை யாருமறியாமலே அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

கிமு 5ம் நூற்றாண்டிலிருந்து 3ம் நூற்றாண்டுக்குள் வால்மீகியால்  இயற்றப்பெற்ற ராமாயணம் தான் நமக்கு ராமனை அறிமுகப்படுத்தியது. ராமாயணம் என்பதன் அர்த்தம் ராமரின் பயணம் என்பதாகும். அதில் உள்ள காண்டங்கள் வழியே ராமரின் பிறப்பு முதல் சீதையை மீட்டு வந்து தன்னுடைய ராஜ்ஜியம் அமைத்தது வரை உள்ளது. வால்மீகிக்கு பிறகுவந்த கவிகள், புரோகிதர்கள், அரசர்கள் என ஒவ்வொருவரும் மக்களை தன் கட்டுப்பாட்டில் வைக்க அடிமைப்படுத்த ஒவ்வொரு வழியை முன்னெடுத்தனர். அவ்வாறாக இங்கு மக்களை அடிமைப்படுத்த முதலில் புகுத்தப்பட்ட விடயம் தான் மரணத்திற்கு பிறகான வாழ்க்கை. பாவம் செய்தவர்களுக்கு நரகமும் , புண்ணியம் செய்தவர்களுக்கு சொர்க்கமும் என்ற கதையாடல். இங்கு  அரசருக்கு எதிராக பேசுவது, செயல்படுவது, கீழ்ப்படியாமல் இருப்பது, ஏன் அரசனுக்கு எதிராக சிந்திப்பது கூட பாவமாக வரையறுக்கப்பட்டது. இவ்வாறாக அரசன் தெய்வநிலைக்கு கொண்டு செல்லப்பட்டான். கவிகளும் புரோகிதர்களும் இந்தக்கதையாடலை மக்களிடம் ஆழமாக விதைத்தனர்.

அடுத்ததாக இதன் அடுத்த படிநிலையாக ‘‘இந்திரனை‘‘ தெய்வமாக முன்னிறுத்தினார்கள். இந்திரன் என்ற ஓர் குறுநில மன்னன் இருந்ததாகவும், அவன் மாவீரனாக  இருந்ததாகவும் ஆய்வாளர்களின் வழி அறியமுடிகிறது. ஒருவேளை அப்படி ஒருவர் இருந்திருப்பாரேயானால் அவரின் வீரதீர செயல்களாலே இந்திரன் என்றொரு பிம்பம் கட்டமைக்கப்பட்டிருக்கும். எப்பொழுதுமே நன்மையின் பக்கம் ஒருவன் இருந்தால் மட்டும் அவனை மிகைப்படுத்த முடியாது. அவனுக்கு எதிராக தீயவன் ஒருவனும் இருக்கவேண்டும். எப்படி எம் ஜி ஆருக்கு ஓர் நம்பியாரோ அதுபோல் தெய்வத்திற்கு எதிராக ஒருவர் வேண்டும். அதற்க்கு வால்மீகியின் ராமாயண இதிகாசம் உயிர்கொடுத்தது. இரண்டாம் நூற்றாண்டிற்கு பின் ராமர் கடவுள் அவதாரமாக முன்னிறுத்தப்பட்டார். ராவணன் அரக்கனாக முன்னிறுத்தப்பட்டார். இவற்றைக் கொண்டு மக்களை பயத்திற்குள் ஆட்படுத்தி மன்னர்கள் தங்களுக்கு ஏற்றாற்போல் அவர்களை அடிமைப்படுத்தினார்கள்.

அதன் தொடர்ச்சியாக மகாபாரதம், இன்னபிற இலக்கியங்கள் மூலமாக இதனை தொடர்ந்து செய்யலாயினர். இந்த கருத்தாக்கம் ஏனைய பகுதிகளிலும் பரவியது. அதேபோல் ராமாயணம் பழமொழிகளில் எழுதப்பட்டு அங்கும் ராமர், அவதார புருஷனாக, கடவுளாக மக்கள் மனங்களில் இடம்பிடித்தார். இது ஒருபுறம், அடுத்தடுத்த

கட்டமாக மக்கள் மனதில் வளர்த்துக்கொண்டு இருக்கும்பொழுது வடக்கில் சுல்தான்கள் மற்றும் முகலாயர்களின் ஆட்சியில் இந்து முஸ்லீம் என்ற தனித்தனி எண்ணவுருவாக்கங்கள் அதிகமாயின. முஸ்லீம் மன்னர்கள் பல பகுதியில் இந்துக்கோவில்களை அழித்தனர். இதனால் அவர்களுக்கு எதிரான இந்துத்துவ மனநிலை பரவியது.

கிபி1530வாக்கில் அயோத்தியில் பாபர் அவர்கள் ஒரு மசூதியை கட்டினார். அதன்பெயர் வரலாற்றில் பாபர் மசூதியாக நிலைத்து நின்றது. அந்த மசூதி கட்டிய இடத்தில் அதற்கு முன் எந்த ஒரு வழிபாட்டுத்தலமும் இருந்ததாக வரலாற்றில் எந்த ஆவணங்களும் இல்லை. பாபர் மசூதியை முகலாயர்களின் வீழ்ச்சிற்கு பிறகு வந்த நவாப் ஆட்சிக்காலத்திலும் பேணி பராமரித்து வந்தனர்.

ஆங்கிலேயர்கள் வந்தபிறகு தான் அவர்களின் குறிப்புகள் வழி அயோத்தியில் நடந்த இந்து முஸ்லீம் பிரச்சனைகள் பற்றி தெரியவருகிறது. 1855ல் நவாப் ஆட்சிக் காலத்தில் ஏராளமான முஸ்லிம்கள் பாபர் மசூதி அருகே திரண்டு, சுமார் நூறு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பிரசித்தி பெற்ற அனுமன் கர்ஹி கோவிலைக் கைப்பற்ற பேரணியாகச் சென்றனர். அந்த அனுமன் கோவில், ஓர் மசூதியை இடித்து கட்டப்பட்டது என்று அவர்கள் கூறினர். அந்தப்பேரணியை அங்குள்ள இந்து சாதுக்கள் தடுத்து நிறுத்தியுள்ளனர். இருதரப்பிற்கும் ஏற்பட்ட சண்டையில் பலர் கொல்லப்பட்டதாகவும், முஸ்லிம்கள் மசூதிக்குள் உள்ள அடக்க தளத்திலும் , சாதுக்கள் மசூதிக்கு வெளியில் உள்ள இடத்திலும் புதைக்கப்பட்டனர். அந்தகாலகட்டத்தில் மசூதியை சுற்றியுள்ள இடம் ராமர் பிறந்த இடம் என்று இந்து சாதுக்கள் கருதி, அங்கு பூஜைகள் செய்து வந்தனர் என்றும் ஆங்கிலேய குறிப்பில் அறிய முடிகிறது.

அடுத்தடுத்த ஆண்டுகளில் ஏற்பட்ட ஆங்கிலேய ஆட்சியின் பொழுது மசூதிக்கு வெளியே பீடமும், சுற்றுசுவரில் ‘‘ராம் ராம்’’ என்ற எழுத்துக்களையும் எழுதி சாதுக்கள் பூஜை செய்ய ஆரம்பித்துள்ளனர். இதனை எதிரித்து மசூதியின் நிர்வாக அதிகாரி 1858 நவம்பரில் ஆங்கிலேய அரசிடம் மனு தாக்கல் செய்கிறார். தொடர்ந்து இந்துக்கள், தொழுகைக்கு இடையூறு செய்வதாகவும் பல மனுக்களை அவர் தாக்கல் செய்துள்ளார். இதை தொடர்ந்து இருதரப்புக்கும் சிறு சிறு மோதல்கள் எழுந்த வண்ணம் இருந்துள்ளன. 1883இல் ‘‘நிர்மோஹி அகாரா’’ என்ற அமைப்பு ஆங்கிலேய ஆணையரிடம் மசூதிக்கு வெளியில் பீடம் அமைக்கப்பட்ட இடத்தில் ராமருக்கு கோவில் கட்டவேண்டும் என்ற முதல் விண்ணப்பத்தை அளிக்கிறது. இரண்டாண்டு கழித்து மீண்டும் அதே அமைப்பு 1885இல் நீதிமன்றத்தில் கோவில் கட்ட அனுமதிக்கவேண்டும் என்று முதல் வழக்கையும் பதிவு செய்தது. அந்த மனுவை நிராகரித்த நீதிபதி, அவ்வாறு அனுமதி கொடுத்தால், எதிர்காலத்தில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் கலவரம் உருவாகக் காரணமாக அமைந்துவிடும் என்று காரணம் கூறியுள்ளார். அதேநேரத்தில் அந்த இடத்தில ராமர் பிறந்ததாகவும், அங்கு கோவில் இருந்து அதனை இடித்து பாபர் மசூதி காட்டியுள்ளார் என இந்துக்கள்

நம்புவதாகவும் நீதிபதி குறிப்பிட்டுள்ளார். அடுத்தடுத்து தொடரப்பட்ட மேலும் 2 வழக்குகளிலும் மற்ற 2 நீதிபதிகளும் இதே போன்றதொரு கருத்தை தெரிவித்தே வழக்கை நிராகரித்துள்ளனர். ஆனாலும் தொடர்ந்து அங்கு இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு இடையேயான இணக்கமற்ற சூழலும் நிலவிக்கொண்டே இருந்துள்ளது.

இன்னொருபுறம் சுதந்திர போராட்டத்தில் காந்தியின் வருகை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் முன்வைத்த எளிமையான, ஏற்றத்தாழ்வுகளற்ற, ஒழுக்கமான, கிராம சுயராஜ்யத்தையும் அதற்க்கு அவர் இட்ட பெயரான ''ராமராஜ்யமும்'' நாடு முழுவதும் அறியப்பட்டது. ஆனால் அவை ராமாயண ராமனுடைய ராஜ்யமாகவே இந்துத்வர்களால் மக்களுக்கு சொல்லப்பட்டது. இதை காந்தியே பலமுறை மறுத்துள்ளார். அவர் ''நான் சொல்லும் ராமராஜ்யம் என்பது அயோத்தி ராமர் பற்றியல்ல, என்னுடைய ராமராஜ்யம் என்பது எளிமையும், ஒழுக்கமும், நேர்மையும், கொண்ட மக்களும் அரசும் உள்ள ராஜ்ஜியம். இதையே நான் முஸ்லிம்களுக்கு குதாய் ராஜ்யம் என்றும் கிருத்துவர்களுக்கு கிங்க்டம் ஆப் காட் என்றும் சொல்கிறேன்'' என்கிறார். ஆனால் இந்த விளக்கங்கள் மக்களுக்கு சென்றடைந்ததோ இல்லையோ ராமராஜ்யம் என்ற சொல் பரவலாக சென்றடைந்தது.

அதைத்தொடர்ந்து சுதந்திரத்தின் பொழுது ஏற்பட்ட இந்தியா பாக் பிரிவினை, அதனூடே நடத்தப்பெற்ற பல லட்ச மக்கள் படுகொலை என அனைத்தும் சேர்ந்து இந்து முஸ்லீம் பிளவை மேலும் வலுவாக்கியது. அதே காலகட்டத்தில் 1948இல் அயோத்தியில் நடந்த இடை தேர்தலில் ராமர் கோவில் பிரச்சனை தேர்தல் அரசியலுக்குள் வந்தது. கோரக்பூர் மடாதிபதி பாபா ராகவ் தாஸ் அங்கு போட்டியிட்டார். அவரின் தேர்தல் வாக்குறுதியில் முக்கியமானது அயோத்தியில் ராமர் கோவில் கட்டப்படும் என்பது. இந்த வாக்குறுதி அங்குள்ள மக்களை மேலும் கிளர்ச்சியுற செய்து அவரை வெற்றி பெற வைத்தது. இந்த வெற்றி செய்தி உத்திரபிரதேசம் மட்டுமில்லாமல் நாடு முழுவதும் பரப்பப்பட்டது. பாபா ராகவ் தாஸ் வெற்றி பெற்ற அடுத்த ஆண்டே அதாவது 1949 டிசம்பர் 22 அன்று இரவு ஆர் எஸ் எஸ் மற்றும் விஸ்வ இந்து அமைப்பை சேர்ந்தவர்கள் மசூதிக்குள் சுவர் ஏறி குதித்து ராமர், ஜானகி, லட்சுமணன் சிலைகளை மசூதிக்குள் வைத்து மேலும் அங்குள்ள சுவர்களில் இந்து ஓவியங்களையும் வரைந்து, ராமர் அங்கே காட்சி தந்து தான் பிறந்த இடத்தை தானே எடுத்துக் கொண்டார் என்று தகவலைப் பரப்பினர். அடுத்த நாள் வெள்ளிக்கிழமை காலை தொழுகைக்கு வந்த முஸ்லிம்களுக்கு இந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அங்கு மேற்கொண்டு கலவரங்கள் ஏற்படாமல் தடுக்கும் வகையில் முந்திக்கொண்ட மாவட்ட நிர்வாகம் அந்த இடத்திற்குள் யாரையும் அனுமதிக்காமல் பூட்டி தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது. முஸ்லிம்கள் அங்கு வைக்கப்பட்ட சிலைகளை அப்புறப்படுத்தவேண்டும் என்று கொடுத்த மனுக்கள் வழக்குகள் என எதற்கும் அந்த மாவட்ட நிர்வாகம் செவி சாய்க்கவில்லை. ஏனெனில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல்துறை அதிகாரி, மாவட்ட மாஜிஸ்திரேட் என அனைவரும்

ஆர் எஸ் எஸ்ஸை சேர்ந்தவர்கள் என்பதை பிற்காலத்தில் ஜனதா கட்சியின் எம்பியாகவும், ஆர் எஸ் எஸ் மற்றும் விஸ்வ இந்து பரீக்ஷித் அமைப்பின் உயர் பொறுப்பாளர்களாகவும் ஆகியதிலிருந்து தெளிவாக புரிந்து கொள்ள முடிந்தது. ஏன் அங்கு ஆட்சியிலிருந்த காங்கிரஸ் அரசு கூட இந்துத்துவர்களுக்கு ஆதரவாக தான் இருந்தது. இந்த விவகாரம் பெரும் பிரச்னையை ஏற்படுத்தும் என்பதை அறிந்து அதில் உடனடியாக நடுநிலையாக செயல்பட்டு யார் மீது தவறு இருக்கிறதோ, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படியும், இந்துக்கள் மீது தவறிருக்கும் பட்சத்தில் அந்த சிலைகளை அகற்றும்படியும் நேரு பலமுறை கடிதம் எழுதியும் அதனை அம்மாநில காங்கிரஸ் முதல்வர் பந்த் அவர்கள் கேட்கவேயில்லை. நேருவிற்கு அரசிடம் இருந்து வந்த ஒற்றைப்பதில் ''வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது, தங்களால் ஏதும் செய்ய இயலாது என்பதே'' அந்தளவிற்கு உத்திரபிரதேசத்தில் அனைத்து அரசு அதிகார மட்டத்தை இந்துத்துவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இது தேசத்தை பிளவுபடுத்திடும் என உணர்ந்த நேரு, இந்து முஸ்லீம் பிரச்சனை மீண்டும் வளரவிடாமல் தடுக்கும் நடவடிக்கைகளில் மக்களை ஈடுபடுத்தினார், தன்னுடைய ஆட்சியை கல்வி தொழில் சார்ந்து திசை திருப்பினார். அனைவரிடமும் சகிப்புத்தன்மையை ஏற்படுத்தும் நோக்கில் அவருடைய செயல்கள் பேச்சுகள் என அனைத்தும் இருக்கும்படி பார்த்துக்கொண்டார். தன்னுடைய 15 வருட ஆட்சியில் இயன்றவரை இந்து முஸ்லீம் பிரச்சனை, அயோத்தி பிரச்சனை, சோமநாதர் கோவில் பிரச்சனை என அனைத்தையும் அதற்குமேல் பெரிதாகாமல் பார்த்து கொண்டார்.

நீதிமன்றங்களில் வழக்குகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் பொழுதே இந்துத்துவ அமைப்புகள் தன்னை வலுப்படுத்திக்கொண்டன. எந்தளவிற்கு எனில் இந்திராவின் ஆட்சியில் சுமார் 1 லட்சத்து 60 ஆயிரம் இந்துக்களை நாடு முழுவதிலிருந்தும் திரட்டி டெல்லியில் நாடாளுமன்றம் நோக்கி பேரணியை நடத்தும் அளவிற்கு. அந்த பேரணியின் மூலம் அங்கு மற்றும் நாடு முழுதும் பல கலவரங்களையும் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களையும் அவர்கள் செய்திருந்தனர். இந்த பேரணி மற்றும் கலவரத்தின் தாக்கம் இந்தியா முழுவதும் உள்ள இந்து முஸ்லீம் அமைப்புகளை மூர்க்கமாக்கியது. அடுத்த சில ஆண்டுகளில் அதே இந்திரா ஆட்சிக்காலத்தில் திணிக்கப்பட்ட '' கட்டாய குடும்ப கட்டுப்பாடு'' திட்டம் முஸ்லிம்களின் இறை நம்பிக்கைக்கு எதிராக அமைந்தது. இந்நிகழ்வுகள் அவர்கள் மனதில் நாம் மேலும் மேலும் நசுக்கப்படுகிறோம் என்பதாக பதிந்தது. இதன் மூலம் அனைத்து முஸ்லீம் அமைப்புகளும் ஒன்றிணைந்து செயல்பட ஆரம்பித்தன. இந்த முஸ்லீம் ஒன்றிணைப்பு இயல்பாகவே இந்துக்களுக்கு எதிரான மனப்பான்மையை அதிகப்படுத்திக் கொண்டே சென்றது.

இந்திரா கொண்டு வந்த எமெர்ஜென்சியின் காரணமாக 1977 தேர்தலில் ஜனதா கட்சி ஆட்சி அமைத்தது. அடுத்த மூன்றுஆண்டுகளில் அவர்கள் ஆட்சியில் இருந்தபொழுதே இந்துத்துவ சக்திகள் மேலும் தங்களை வலுப்படுத்திக் கொண்டன. அவர்கள் இந்துக்களின் புராதான நகரங்கள் என நம்பப்படும் காசி, அயோத்தி, மதுரா ஆகிய

இடங்களை தங்கள் முழுக்கட்டுப்பாட்டில் கொண்டுவர முடிவெடுத்து செயல்பட்டனர். அங்குள்ள மசூதிகளை அகற்றி அந்த பகுதியை இந்துக்கள் மட்டுமே இருக்கும் புண்ணியஸ்தலங்களாக மாற்ற முடிவெடுத்தனர். அதன் முதல்கட்டமாக அயோத்தி குறிவைக்கப்பட்டு 1984இல் ‘‘ராம ஜன்ம பூமி முக்தி யாக்யா கமிட்டி’’ மற்றும் ‘‘ராம் ஜன்மபூமி நியாஸ்’’ என்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்புகளின் மூலம் ராமர், ஜானகி சிலைகள் கூண்டுக்குள் இருப்பது போல மோட்டார் வாகன ரதம் உருவாக்கப்பட்டது. அந்த ரதம் பிகாரிலிருந்து அயோத்தி லக்னோ டெல்லி வழியே நாடு முழுவதும் பயணிக்க திட்டமிட்டு செப்டம்பர் 25 ஆம் தேதி புறப்பட்டது. ரத யாத்திரை வந்த வழிகளில் பெரும் ஆதரவு திரண்டது, தங்களின் அபிமான கடவுள்கள் கூண்டுக்குள் இருப்பதைப் பார்த்து இந்து மக்களிடம் வலுவான எதிர்ப்பும் அனுதாபமும் உருவானது. மசூதியின் கதவுகளில் போடப்பட்டுள்ள பூட்டுகளை அகற்றி, அங்கே கோவில் கட்டுவதற்காக அந்த இடத்தை இந்துக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது அவர்களின் பிரதான கோரிக்கையாக இருந்தது. அப்பொழுது எதிர்பாராதவிதமாக நடந்த இந்திரா காந்தியின் படுகொலையினால் சுமார் ஒன்றரை மாதமாக பீகார் உத்திரபிரதேசம் டெல்லி என பலப்பகுதிகளுக்கு சென்று வந்த அந்த ரதயாத்திரை பாதியிலேயே நிறுத்தும் சூழல் ஏற்பட்டது .

அடுத்துவந்த பொதுத் தேர்தலில் ராஜீவ் காந்தி அதிக பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்றார். ஆட்சி பொறுப்பேற்றதும் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொடர்புத்துறையை மேம்படுத்தினார். அதன் காரணமாக நாடு முழுவதும் தொலைக்காட்சி பெட்டியும் அதன் ஒளிப்பரப்பு சேவையும் பரவலானது. இந்த சேவையை பயன்படுத்தி ஒளிபரப்பப்பட்ட ‘‘ராமாயணம்’’ தொடர் நாடு முழுவதும், ஏன் ராமர் யாரென்றே தெரியாத அயோத்திக்கு சம்பந்தம் இல்லாத குக்கிராமங்களில் கூட ராமரை கடவுளாகவும் அவதார புருஷனாகவும் கொண்டு சென்றது. தொலைக்காட்சி வழி மக்கள் மனதில் ஏற்பட்டிருந்த கிளர்ச்சியும் அதுவரை நெடும்தொடரை பற்றி அறிந்திராத மக்களுக்கு இந்த ‘‘ராமாயணம் ‘‘ தொடர் புது அனுபவமாக இருந்தது. அதேபோல் ராமாயணத்தை கதைவழியாகவோ சிலமணிநேர நாடகங்கள் வழியாகவோ அறிந்திருந்த மக்களுக்கு பலவருடங்கள் ஓடிய ‘‘ராமாயணம்’’ நெடுந்தொடர் அவர்களுக்குள்ளாக ராமனை பற்றிய தெய்வீக நம்பிக்கையை மேலும் அதிகப்படுத்தியது. இதன்மூலம் நாடு முழுவதும் ராமர் அயோத்தியில் பிறந்தார் என்றும், அவருக்கு அங்கு கோவில் வேண்டும் என்பதும் மக்கள் மனதில் அவர்களை அறியாமலே பதிந்தது.

அதே காலகட்டத்தில் விஷ்வ இந்து பரிஷத் அமைப்பு பாபர் மசூதியின் பூட்டை உடைத்து அதனை கைப்பற்ற போவதாக அறிவித்து போராட்டங்களை முன்னெடுத்தது. இதற்கு இந்துக்கள் மத்தியில் பெரும் ஆதரவு குவிந்தது. இந்தவிவகாரத்தில் ராஜீவ்காந்தி, விஷ்வ இந்து பரிஷத்தின் போராட்டத்தை அடக்க அவர்களுக்கு ஆதரவாகவே இருந்தார் என தெரிகிறது . மாவட்ட நீதிமன்றத்தில் மசூதியின் பூட்டை திறக்க வேண்டும் என புதியதாக வழக்கு பதியப்பட்டது. அரசுத்தரப்பிலிருந்தும்

காவல்துறையும் பூட்டை திறப்பதால் எந்த சட்டம் ஒழுங்கு பிரச்னையும் வராது என உத்திரவாதம் கொடுக்கப்பட்டு அடுத்த ஒருமணிநேரத்தில் பூட்டு திறக்கப்பட்டது. இது முஸ்லிம்கள் மத்தியில் பெரும் அதிருப்தியையும் கோபத்தையும் ஏற்படுத்தியது.

இன்னொருபுறம், விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லிம் பெண்மணி ஷா பானுவுக்கு ஜீவனாம்சம் தர வேண்டும் என்று உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை ரத்து செய்ய வேண்டும் என்று ராஜீவ் காந்திக்கு முஸ்லிம் தனிநபர் சட்டவாரியம் அழுத்தம் கொடுத்துக் கொண்டிருந்தது. உச்சநீதிமன்ற தீர்ப்பை எதிரித்து முஸ்லிம்களின் போராட்டம் தீவிரமடைந்த காரணத்தால் வேறுவழியின்றி நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்யும் வகையில் ஒரு மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினார் ராஜீவ் காந்தி. இவ்வாறாக இந்து மற்றும் முஸ்லீம் போராட்டத்தை அவர்களுக்கே ஆதரவளித்து வளைந்து செயல்பட்டது போராட்டக்காரர்களுக்கு அவர்களின் வன்முறைமீது மேலும் நம்பிக்கையை விதைத்தது.

இதற்கு ஒருபடிமேல் சென்று அயோத்தியில் நடந்த தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பேசிய ராஜீவ்காந்தி ‘‘தான் வெற்றிபெற்றால் ராமராஜ்யம் அமைப்பேன்’’ என வாக்குறுதி அளித்தார். இவரின் வாக்குறுதி மகாத்மா காந்தியின் ராமராஜ்யம் அல்ல, அயோத்தி ராமரின் ராஜ்யம். இதை தனக்கு சாதகமாக பயன்படுத்த முனைந்த விஸ்வ இந்து பரிசித் ‘‘நாடு முழுவதிலிருந்தும் யாத்திரை நடத்தி ராமர் கோவில் கட்ட மக்களிடமிருந்து கற்கள் பெற போவதாகவும் மேலும் மசூதி வளாகத்தில் கோவில் கட்ட அடிக்கல் நாட்ட போவதாகவும்‘‘ அறிவித்தது. ராஜீவ்காந்தியின் அறிவுறுத்தலின் பேரில் உள்துறை அமைச்சர் பூட்டாசிங் உத்திரபிரதேசம் சென்று அங்கு முதல்வர் திவாரி வீட்டில் விஸ்வ இந்து பரிசித் அமைப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தி எந்தவிதவித்த வன்முறையும் நடக்காது என உறுதிபெறப்பட்டு யாத்திரைக்கும் அடிக்கல் நாட்டுக்கும் அனுமதியளித்தார். இவை அனைத்தும் நீதிமன்ற தீர்ப்புகளை மீறி மத்திய மாநில அரசின் அனுமதியுடன் நடந்தது. இதன்பேரில் அங்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இதையொட்டி நாடுமுழுவதும் முஸ்லீம் அமைப்புகள் போராட்டங்களை நடத்தியது. இதனால் வேறுவழியின்றி அந்த இடத்தில் மேற்கொண்டு எந்த பணியும் நடக்க கூடாது என அரசு தடை விதித்தது.

தொடர்ந்து வந்த அடுத்த தேர்தலில் ராஜிவ் காந்தி தோற்று பாஜக ஆதரவுடன் வி பி சிங் பிரதமரானார். பாஜக ஆதரவில் ஆட்சி அமைத்தாலும் வி பி சிங் இந்துத்துவர்களின் இந்த போக்கை முற்றிலுமாக எதிர்த்தார். அவருக்கு அந்த சர்ச்சைக்குரிய இடத்தில் பல நூற்றாண்டுகளாக மசூதி இருக்கிறது எனவே அங்கு இந்துக்கள் கோவில் கட்ட அனுமதியளிக்க கூடாது என்ற பார்வை இருந்தது. வேண்டுமானால் அயோத்தியில் அந்த மசூதியை தொந்தரவு செய்யாமல் எங்கு வேண்டுமானாலும் ராமருக்கு இந்துக்கள் கோவில் கட்டிக்கொள்ளலாம் என நினைத்தார். உத்திரபிரதேசத்தில் முலாயம் சிங்கை முதல்வராக்கி அங்கு இந்துத்துவர்களின் முன்னெடுப்புகளை கட்டுப்படுத்தினர். முலாயம் சிங்கும் வி பி சிங்கின் அதே

நிலைப்பாட்டில் இருந்தார் என்பது கவனிக்க வேண்டியது.

இவை பாரதிய ஜனதா கட்சிக்கு அதிருப்தியை ஏற்படுத்தியது. நம் ஆதரவில் ஆட்சி அமைத்துக்கொண்டு நம்மையே எதிர்க்கிறார்கள் என. அதுவரை நேரடியாக களம் காணாத பாஜக, தற்பொழுது இராமர் கோவில் பிரச்சனையில் நேரடியாக தலையிட முடிவெடுத்து, அத்வானி தலைமையில் ரத யாத்திரையை அறிவித்து முன்னெடுத்தது. சோம்நாத் கோவிலிலிருந்து ரத யாத்திரையை தொடங்கிய அவர் அயோத்தியில் முடிப்பதகாக அறிவித்திருந்தார். இந்த ரத யாத்திரை செல்லும் இடம் மற்றுமின்றி நாடு முழுவதும் இந்துக்களை ஒன்றிணைத்து முஸ்லிம்களுக்கு எதிரான கலவரங்களை ஏற்படுத்தியது.

இதை கட்டுப்படுத்த எண்ணிய வி பி சிங், பிகாரில் முதல்வராக இருந்த லாலு பிரசத்திடம் பேசி அத்வானியை பீகார் எல்லையிலேயே கைது செய்ய பணிந்தார். லாலுவும் அவ்வாறே செய்தார். அத்வானி கைது, இந்துத்துவர்களையும் கரசேவகர்களையும் வன்முறையை மேலும் மூர்க்கமாக்க தூண்டியது. அவர்கள் பல்லாயிரம் பேர் திரண்டு அயோத்தியில் பாபர் மசூதியை தாக்க முற்பட்டனர். அவர்களை முலாயம் சிங் அரசு தாக்கியும் துப்பாக்கி சூடு நடத்தியும் கட்டுப்படுத்தியது. இதில் பல கரசேவகர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த பிரச்சினையை இந்துத்துவ ஆதரவு பத்திரிக்கைகள் நாடு முழுவதும் மக்களுக்கு கொண்டு சென்றன. இந்துக்கள் மத்தியில் வி. பி. சிங் மற்றும் முலாயமிற்கு எதிரான மனநிலை பல இடங்களில் ஏற்பட்டது. இந்த சம்பவத்தினால் வி. பி. சிங் மீதான கோபம் பாஜாகவிற்கு அதிகமாகிருந்தது, அதே வேளையில் மண்டல கமிஷன் அறிவுறுத்தல் படி வி. பி. சிங் இட ஒதுக்கீட்டை அமல்படுத்தியத்தியதும் சேர்ந்து, அவரது அரசுக்கு பாஜக அளித்து வந்த ஆதரவை வாபஸ் பெற்றது. ஆட்சி கவிழ்ந்தது.

இடையே ராஜி காந்தி படுகொலை நடந்தேறி நரசிம்மராவ் பிரதமரானார். அத்தேர்தலில் உத்திரபிரதேசத்தில் முலாயம் தோற்று பாஜகவின் கல்யாண்சிங் முதல்வர் ஆனார். அவர் பதவியேற்றதும், மசூதிக்கு எதிரே 2.77 ஏக்கர் நிலத்தை சுற்றுலா மேம்பாட்டுக்காக கையகப்படுத்தினார். ராம் கதா பூங்காவுக்காக கையகப்படுத்தப்பட்ட 42 ஏக்கர் நிலம் குத்தகை அடிப்படையில் விசுவ இந்து பரிஷத்துக்கு வழங்கினார். அதுமட்டுமில்லாமல் நீதிமன்ற உத்திரவை மீறி அங்கு கோவில் கட்டுமான பணிகளை தொடங்கினார். இதனால் நாட்டில் மீண்டும் இந்து முஸ்லீம் கலவர சூழல் உருவானது. வேறுவழியின்றி நீதிமன்றம் மூலமும் பேச்சுவார்த்தை மூலமும் நரசிம்மராவ் அந்த கட்டுமான பணிகளை நிறுத்திவைத்தார்.

ஆயினும் அடுத்த ஆண்டு 1992 டிசம்பரில் கரசேவை அறிவிக்கப்பட்டது. இதற்கு முதல்வர் கல்யாண்சிங் முழு ஆதரவு அளித்தார். அவர் உச்சநீதிமன்றத்தில் இந்த கரசேவையால் எந்த பிரச்னையும் ஏற்படாது என உறுதிமொழி அளித்து நீதிமன்ற

அனுமதி பெற்றார். அதேநேரத்தில் கரசேவையின் பொழுது எந்த அசம்பாவிதம் ஏற்பட்டாலும் அதனை தடுக்க பலப்பிரயோகம் செய்யக் கூடாது என்று காவல் துறையினருக்கு கல்யாண் சிங் எச்சரிக்கை விடுத்திருந்தார். மத்திய பாதுகாப்புப் படையினரின் உதவியைப் பெறுவதற்கு கூட, மாவட்ட நிர்வாகத்தை அவர் அனுமதிக்கவில்லை.நரசிம்மராவ் அரசும் இதில் தலையிட விரும்பாமல் வேடிக்கை பார்க்கவே விரும்பியது. தெளிவாக திட்டமிட்டபடி ஆளும் அரசின் ஆதரவுடன் டிசம்பர் 6ம் தேதி உச்சநீதிமன்ற பார்வையாளர்கள் முன்னிலையில் வன்முறை தூண்டப்பட்டு பாபர் மசூதி இடிக்கப்பட்டது. அங்கு ராமருக்கு தற்காலிக கோவிலும் ஏற்படுத்தப்பட்டது. நீதிமன்றம் நியமித்த பார்வையாளரின் முன்னிலையில் பக்தர்கள் வருகையும் பூஜைகளும் தொடங்கின. இதில் மத்திய மாநில அரசுகளை கண்டித்து நாடு முழுவதும் முஸ்லீம்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாநில அரசு தான் இது ஏற்படாமல் தடுத்திருக்கவேண்டும் என நரசிம்மராவ் குற்றம் சாட்டி ஒதுங்கிக்கொண்டார்.

அதன்பிறகான பல போராட்டங்கள், வன்முறைகள் , படுகொலைகள், வழக்குகள் என அனைத்தும் 2019 வரை நடந்து இறுதியாக கடந்தவாரம் நவம்பர் 9ம் தேதியன்று உச்சநீதிமன்றம் ‘‘ராமர் கோவில் கட்ட அந்த இடத்தை வழங்கியும், மசூதி கட்ட வேறுஒரு இடம் வழங்க சொல்லியும்’’ தீர்ப்பெழுதியுள்ளது. ஆரம்பத்தில் சொன்னதுபோல் இது "Courts Of Hindutuva" என்ற நிலையில் நீதிமன்றம் ஆளும் அரசின் மற்றும் நாட்டின் பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற்கு இணங்கவும், சட்டம் நீதி என அனைத்தையும் தூக்கியெறிந்து இந்த தீர்ப்பை தெரிவித்துள்ளது.

இந்த தீர்ப்பின் மூலம் நீதிமன்றம் தன்னை இந்துமன்றம் என்று நாட்டுக்கு பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த தீர்ப்பு, மசூதி இடிப்பை நியப்படுத்தியுள்ளது, அங்கு ஏற்கனவே ராமர் கோவில் இருந்தது என்ற ஆதாரமற்ற நம்பிக்கையின் பேரில் உள்ள விடயத்தை ஏற்றுக்கொண்டுள்ளது, 100 கோடி பேர் கொண்ட பெரும்பான்மை மதத்தவரின் நம்பிக்கை புண்பட்டு விடக்கூடாது என்பதற்காக சிறுபான்மை மக்களை மறைமுகமாய் அச்சுறுத்தும் வகையிலான தீர்ப்பு இந்திய அரசியல் சாசனத்தின் மதசார்பற்ற நாடு என்ற சொல்லுக்கே முரணானது இல்லை அரசியல் சாசனத்துக்கே முரணானது.

இன்று நேற்றல்ல சுமார் 150 ஆண்டுகளுக்கு மேலாக நடக்கும் ஒவ்வொரு நிகழ்வும் இந்துத்துவ அதிகாரிகளாலும், இந்துத்துவ ஆதரவு அரசுகளாலுமே சிறுக சிறுக ஒவ்வொரு அடியாக அந்த மசூதியை ஆக்கிரமித்து இறுதியாக அங்கு கோவில் கட்ட இந்துத்துவ அரசின் உச்சநீதிமன்றம் ஆதரவளித்து தீர்ப்பெழுதியும் விட்டது. மக்களும் தாங்கள் அறியாமலே இந்த தீர்ப்பை ஏற்றுக்கொள்ளும்படியாக மேற்சொன்ன ஒவ்வொரு நிகழ்வுகளின் வழி பழக்கப்படுத்தப்பட்டுவிட்டனர்.

வால்மீகியினால் உருவாக்கப்படுத்தப்பட்ட ராமரின் பயணம் அதன் வழிநெடுக பல

குரூரமான ஒழுக்கமற்ற செயல்களை இந்த நாட்டிற்கு வழங்கியுள்ளதாக வரலாறு என்றும் நினைவில் நிறுத்தும்!! நேரு சொன்னது போல் பெரும்பான்மை சிறும்பான்மை அற்று மதசார்பினை கொண்ட நாடாக எதிர்காலம் அமைக்கட்டும்!!

நன்றி,

– ரா.ராஜராஜன், மன்னார்குடி

---

# மீண்டும் எழுவாய் மனமே

வயிறு நிறைய தீராப்பசி
மூடிய கதவுகளில் மோதி
உணவக வாயில்களில்
சருகென உதிரும்
வறுமை நாக்குகள் குப்பைக்கூலமாய்

பாலையான வயல்வெளி
கொஞ்சலாய் பொழியும்
முகவரியில்லா ஏமாற்றுமழை

காதல்சாவி கருப்பைத் திறக்க
உணர்ச்சிப்பெருக்கில்
கருகித்தீயும் பாடசாலைகளில்
குலவிளக்குகள் மானம்

உழைப்பின் சாலைநெடுகில்
இறுதி ஊர்வலப்பூக்களாகி
நசுங்கி மிதிபடும் வியர்வைத்துளிகள்

பசுத்தோல் போர்த்திய முதலைகள்
கழுத்துநெறிக்கக் காத்திருக்கும்
நாற்காலிகள் மீதில் சொகுசாய்...
தேவைகள் மிகையாகி
வாகனங்களை முந்திவிரையும்
அவசரகதியில் சுயநலச்சக்கரம்

வாழ்வின் பீடத்தில் பலியாடாகி
துயரச்சிலுவையில் உயிர்கசியும்
நாளும் மனிதம்

ஆழிப்பேரலையாய்
வெறிகொண்ட சூறாவளியாய்
முள்வேலி அடக்குமுறையாய்
அடர்ந்து பொழியும் பேய்மழை
வெள்ளமாய்
போர்க்கலமாகி குறிவைத்துத் தாக்க
சேமிப்புக்கிடங்குகளில்
தேக்கிவைக்கும்
ஒட்டுமொத்த துயரமும்
மீண்டும் உயிர்ப்பெற்றுச்
சுவர்களை உடைத்தெறியும் காலம்
விரைவில் வசப்படும்
விழித்தெழு மனமே!



பொன். தெய்வா
ஐவேலி, விழுப்புரம் மாவட்டம்.

# உனையேன் மறந்தேன்?

வெண்மை சோறு உண்டு
வெற்று பதிரானோம்

மேன்மை நீலியிழந்து
மயிரினை அறுவடை செய்கிறோம்

பன்மை வேதியல் கூற்றெடுத்து
உயிர் சுனை பூனைகாலிழந்தோம்


ஆவாரை நீரிழந்து
நீரிழிவில் நீடிக்கிறோம்

உண்மை உணர மறந்தோம்,
ஏனோ நிலபனை மறந்ததால்

அண்மையில் அகம் இழந்தோம்
மருதம்பட்டை இழந்ததால்



பெ.மேகநாதன்





S.N.சபரீஷ்
LKG
கோபாலசமுத்திரம் பள்ளி
மன்னார்குடி.

# இன்றைய நரகாசுரன்!

தீபாவளி திருநாள்,
தீப ஒளி திருநாள்!
அக்கிரமங்களை
அழித்த நாள்,
ஆனந்தம் பூரித்த நாள்!

வீதியெங்கும் பட்டாசு,
மனசெல்லலாம் மத்தாப்பு!
வாய் நிறைய இனிப்பு,
வயிற் நிறைய களிப்பு!
ஆனாலும் - பாசத்திற்காக
ஆயிரம்பேர் அநாதை இல்லத்திலும்
நடைபிணமாய் முதியோர்
இல்லத்திலும்
ஏங்க...?
கைபேசியில் யாருடனோ
உரக்க கத்துகிறோம்,
தீபாவளி வாழ்த்துக்கள்
சொல்லி...!

வாழ்வில் ஒளியேற்ற யாருமில்லாமல்,
எத்தனையோ ஏழை இதயங்கள்,
இங்கே இருண்டு கிடக்க,
நாம் மட்டும்
தீபம் ஏற்றி
அழகு பார்க்கிறோம்

முழு பட்டினாய் ஆயிரம் பேர்,
ஆங்காங்கே சுருண்டு கிடக்க,
விதவிதமாய் பலகாரம் செய்து
வயிறு முழுதும் நிறைத்துக்
கொள்கிறோம்


இல்லாதவர் வாழ்வில்
கொண்டாட்டம் இல்லாத போது,
மத்தாப்பு சீற்றங்களும்,
அணுகுண்டு வெடியும்,
சரவெடியின் சத்தமும்,
ராக்கெட் வெடியின்
வேகமும் பார்த்து
உரக்கத் தான்
சிரிப்போம்,
இன்றைய
நரகாசுரன்களாய் ..!

போன தீபாவளிக்கு
வாங்கிய கடன் தீருமுன்னே,
புதுக்கடன் வாங்கி,
ஆச்சாரங்கள் செய்து,
அமர்க்களங்கள் செய்து,
ஆட்டம் போட்டு,
புதுப்படம் பார்த்து,
அசத்தலாக கொண்டாடி விட்டோம்
இந்த வருடமும்
தீபாவளி
சரி -
இல்லாதவர்கள்
என்றுதான் கொண்டாடுவார்கள்
தீபாவளி.?



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி

மன்னார்குடி ரா. ராஜேஷ்



எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 18)

# செண்பக வனம்

சோழ குலதெய்வமான நிசும்ப சூதனி கொற்றவைக்கு சிறப்பு வழிபாட்டிற்காக, சக்கரவர்த்தி உத்தம சோழரின் மனைவிமார்களும்; அருண்மொழித் தேவரின் மனைவிமார்களும்; வந்தியத்தேவர், குந்தவை நாச்சியார் மற்றும் மற்றும் அவர்தம் குடும்பங்களும் செம்பியன்மாதேவி அடிகள் என குடும்ப சகிதமாய் சென்றுகொண்டிருக்க வழியிலேயே..

<u>நடப்பவை இனி ...</u>

மதம் கொண்ட யானைகளின் வெறியாட்டம் ஆரம்பித்தவுடனே அதனை தடுத்து நிறுத்த அரசகுல ரத ஊர்வலத்திற்கு பாதுகாப்பாய் பக்கவாட்டில் வந்து கொண்டிருந்த வீரர்கள் சென்று விட, பின்னால் வந்து கொண்டிருந்த வீரர்கள் ரதங்களில் பக்கவாட்டில் வந்தார்கள். குந்தவை தேவியும் பஞ்சவன் மாதேவியும் பயணித்துக்கொண்டிருந்த ரதத்தின் அருகில் வந்து கொண்டிருந்த வேளக்காரப் படை வீரன் அவர்களை பார்த்து வணங்க கைகூப்பிய நேரம், சட்டென எங்கிருந்தோ ஒரு அம்பு அவன் கைகளைப் கிழித்துக் கொண்டு சீறிப்பாய்ந்து குந்தவை தேவியின் தோள்பட்டையை தைத்தது.

இதனை முற்றிலும் எதிர்பாராத வீரன் திகைப்பும் அதிர்ச்சியுமாய் ’ஏய்’ என்று சத்தமிட்டுக் கொண்டே தன் உடைவாளை உருவிக் கொண்டு அம்பு வந்த திசையை நோக்கி குதிரையை திருப்பி ஆவேசமாய் அங்குமிங்கும் தேடினார். அதற்குள்ளாக அங்குமிங்கும் இருந்தும் ‘‘சர்ர் ‘‘புர்ர்‘‘ என்று ’அம்புகளும் கூர்வாள்களும்’ சீறிப்பாய்ந்தன. ரத ஊர்வலத்தோடு சேர்ந்தே நடைஊர்வலமாக வந்து கொண்டிருந்த மக்கள் கூட்டம் சிதறி ஓடியது.

குந்தவை தேவியின் தோள் பட்டையில் அம்பு இறங்கியதை கண்ட பஞ்சவன்மாதேவி

அந்த நொடியே இவ்விடத்தில் உள்ள எல்லோரையும் இழுத்து கீழே தள்ளி தானும் கீழே அமர்ந்து கொண்டு பக்கவாட்டு ரத சுவற்றில் ஒரு ஒலியை கைகளால் தட்டி எழுப்பினார். அந்த ஒலி கேட்ட மாத்திரத்தில் இதற்கு முன்னால் சென்ற எல்லா ரதங்களும் அதே போல ஒலி எழுப்ப அதன்மீது நின்றுகொண்டு இருந்த அனைவரும் சட்டென ரதத்தின் தரையோடு தரையாக படுத்துகொண்டார்கள் ரதத்தை ஓட்டும் சாரதிகள் மட்டும் அங்கும் இங்கும் பார்த்துக்கொண்டு ரதத்தின் போக்கை மாற்றினார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் அந்த ரதங்கள் ஒரு வட்டமாக சுற்றிக் கொண்டு நின்றது. அதிலிருந்து குதிரைகள் விடுவிக்கப்பட்டு இடையிடையே இருந்த இடைவெளிகள் ரதத்தில் இருந்த கேடயங்கள் மூலம் நிரப்பப்பட்டன. ரத சாரதிகள் தங்கள் இரண்டு கைகளிலும் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு கேடயங்களை ஏந்திக்கொண்டு அதனை அம்பு மழையிலிருந்து பாதுகாக்கும் குடையாக மாற்றினார்கள்.

பஞ்சவன் மாதேவியார் ரதத்தின் பக்கவாட்டு சுவற்றில் எழுப்பிய அந்த சப்தம், வேலைக்கார படையினரின் ஆபத்தின் அறிகுறிக்கான சங்கேத மொழிக்கான சத்தம். அதனைக் கேட்ட மாத்திரத்தில் கோட்டைக்குள் வெவ்வேறு பணிகளை தங்களை உட்படுத்திக் கொண்டிருந்த வேலைக்கார படைகள், அதே சப்தத்தை எழுப்ப, அது சங்கிலி தொடர் போல ஒவ்வொருவராலும் எழுப்பப்பட்டு கோட்டைக்குள் முழுவதும் எதிரொலித்தது. கோட்டை வாயில்கள் மறுபேச்சின்றி மூடப்பட்டு 'அபாய' எக்காலம் ஒழிக்கப்பட்டது.

கோட்டை மதில் சுவர் மீது இருந்த அம்பு உமிழும் பொறிகள் அனைத்தும் கோட்டைக்கு உட்புறமாக திருப்பப்பட்டன. இவையனைத்தும் அனிச்சை செயல் போல செயல்பட்டுக் கொண்டிருந்தாலும் அவர்களுக்கெல்லாம் எங்கே என்ன நடக்கிறது என்று தெரிவதற்குள் வட்டவடிவ கேடயம் போல அமைக்கப்பட்டிருந்த ரத கூடாரத்தின் பாதுகாப்பு கேள்விக்குறியாக இருந்தது. அதனை சுற்றி இருந்த மக்கள் கூட்டம் அப்போதே சிதறி ஓடியிருந்தது.

அரசகுடும்பத்தினரை தாக்க வந்த கூட்டம் மட்டும் அதிக வீரியத்துடன் தாக்கிக் கொண்டிருந்தது. மக்கள் கூட்டத்தில் இருந்த வேலைக்கார படைகளும், தைரியமிக்க வீரர்களும் அவர்களோடு சண்டையிட்டு மடிந்தார்கள். யார் சாதாரண மக்கள், யார் தாக்க வந்தவர்கள் என்று தெளிவாக புரிந்து கொள்வதற்கு மிக சிரமமாக இருந்தது.

எதிரியை ஒரு வீரன் தாக்குவதற்கு அவனுக்கு பின்னால் நின்றிருந்த வேறு எதிரி அவனைத் தாக்கிக் கொல்ல அந்த சண்டை களமே குழப்பமாய் இருந்தது.

ரதத்திற்கு பாதுகாப்பாய் வந்திருந்த வேளக்காரப் படைகள் மதங்கொண்ட யானையை அடக்க சென்று இருந்தப்படியாலும் ரதத்திற்கு அருகாமையில் வெகுசில பெண் வீரர்களும் ஆண்வீரர்களுமே இருந்தப்படியாலும் தாக்குதலை கட்டுப்படுத்துவது

மிகுந்த சிரமமாகவே இருந்தது. எதிரியின் போர் திறமை அசாத்தியமாய் இருந்தது.

ரதத்தால் ஆன அந்த அரணுக்குள் இருந்த குழந்தைகளும் தாக்குதலின் வீரியத்தை கண்டு அழ, செம்பியன் மாதேவி அடிகளின் கைகள் கோபத்தோடு வாளை தேடியது. அதுவரை அமைதி காத்த இளவரசி மாதங்கி, கேடயத்தை குடையாக பிடித்து நின்ற சாரதியின் உடைவாளை உருவி கொண்டு திமிறி எழ, குந்தவை தேவியோ தனது இடக்கையில் பாய்ந்து இருந்த அம்பினை பிடுங்கி எறிந்து தன் சீலையிலிருந்து ஒரு சிறு பாகத்தை கிழித்து கட்டிக்கொண்டு தன் முன்னால் கிடந்த வாளையும் வேளையும் எடுத்து கொண்டு பஞ்சவன் மாதேவியை பார்க்க, பஞ்சவன்மாதேவியோ, தன் இரு கைகளும் வாளோடு முன்னமே தயாராய் இருந்தார். இருவரும் இளவரசி மாதங்கியை சைகை காட்டி அழைத்து தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டனர். திடீரென அந்த வட்டவடிவ கோட்டையின் வாயில் போலிருந்த கேடயம் திறக்கப்பட்டு சீறும் புலி என மூவரும் பாய்ந்து வெளியேறினர். அந்த ரதக்கோட்டையை நோக்கி யார் யாரெல்லாம் தாக்குகிறார்களோ, அவர்கள் தான் இந்த பெண் புலிகளுக்கு இலக்கு. மூவரும் ஆளுக்கொரு திசையில் பாய்ந்தார்கள். அதுவரை பதுமைகளாகவே பார்த்து வந்திருந்தவர்களுக்கு இந்த 'பாயும்புலி' அவதாரம் புதிதாக இருந்து இருக்குமோ தெரியாது. எதிர்க்க வந்த அவர்கள், திகைத்து நிற்கையில் அவர்களின் சிரசு காற்றை உரசிக்கொண்டு தரையில் விழுந்தது. அதற்குள்ளாக மதங்கொண்ட மோலயானைகள் வீழ்த்தப்பட்டு இருந்தது.

அங்கிருந்து திரும்பிய வேளக்காரப் படைகளும் அபாய ஒலியினால் ஆயத்தமான வேளக்காரப் படைகளும், யுத்த களத்தை சூழ அந்த வட்ட வடிவமான ரதகோட்டைக்கு முன்னே மீண்டும் ஒரு வட்ட வடிவமான கோட்டை சுயம்பாய் உருவானது. கோட்டை சுவர்களாக சோழ நாட்டு மக்களும் படைவீரர்களும் நிற்க அதற்குள் சுமார் 20, 30 எதிரி வீரர்கள் கையில் ஆயுதங்களுடன் நிற்க அவர்களுக்கெதிரே உடம்பெங்கும் செங்குருதி சொட்டச் சொட்ட கண்ணில் தீப்பறக்கும் வெறியோடு 'அசுரவதம் செய்த காளிமாதேவி' போல மூன்று பெண் புலிகளும் அடுத்த தாக்குதலுக்கு காத்திருக்க எங்கிருந்தோ ஒரு குரல், ''நிறுத்துங்கள்'' என்று கேட்டது.

## தொடரும் ...

விவசாயின் இன்றைய
வாழ்க்கையோ
வறுமையினால்
பட்ட மரத்தைப்போல்
நிற்கின்றான்!

தான் பயிறிட்ட இடத்தினிலே
இன்று தனை மறந்து
தன் உயிரை மாய்கின்றான்.

நீயிட்ட விதைதான்
இன்று உனை அழிக்கின்றது!

தேர்தல் ஓட்டின் வடிவில்
நீயிட்ட விதைதான்
இன்று உன்மேல் படர்ந்து
உனை சிதைக்கின்றது!

நீயோ சரியாக
தேர்ந்தெடுத்திருந்தால்
இன்று நீயோ பசுமையாக
இருந்திருப்பாய்!
நீ இனியாவது திருந்துவாயா !!!!!

இவன்
## மா. மணிமன்னன்
இராயபுரம்







## ம. ரக்ஷிகா
இராயபுரம், நான்காம் வகுப்பு
நீலன் மெட்ரிகுலேஷன் பள்ளி
நீடாமங்கலம்.

# ரோக்


திருச்சி பார்த்தி

அதிகாலை நான்கு மணிக்கே முருகன், ஆசாரியை வர சொல்லியிருந்தான். அந்த தூங்கா இரவை படபடப்புடன் காத்திருந்து சரியாய் இரண்டரை மணிக்கு தனது யமஹாவை கிளப்பினான் வீரா. சைலன்சரின் மிரட்டலான சத்தத்திற்கு தெருக்கார நாய்கள் முனகலுடன் விலகின. மாடியிலிருந்து சத்தம் காட்டாமல், கவலை தோய்ந்த முகத்தோடு விழியோர கண்ணீரால் தன் மகனைப் பார்த்து கொண்டிருந்தாள் வீராவின் தாய். வேகமாய் சென்ற வீரா ஓர் புள்ளியில் தன் அன்னையின் பார்வையில் மறைந்தான். சிலநேரம் அங்கேயே கண்கள் நிலைகுத்த பார்த்துவிட்டு தன் வீட்டில் நடந்த சோகத்தை எண்ணி வாய்விட்டு அழுதுவிட்டு உள்ளே சென்றாள்.

காவிரி பைபாஸை கடந்து, மரக்கடையிலுள்ள லாரி டிங்கரிங் பட்டறைக்கு சென்றான் வீரா. ஏற்கெனவே வீராவின் நண்பன் மகேஷ் சொல்லியிருந்ததால், இவன் சென்றதும், தயாராக வைத்திருந்த பழைய பர்கோ லாரியின் லாவகமான இரும்பு பட்டையை வாங்கினான், பேரம் பேசி 500 ரூபாய்க்கு முடித்தான், 100ட்ட் அகலத்தில் 10 ட்ட் தடிமனில் நல்ல லாவகமான தேனிரும்பு பட்டை, வெளியே பேப்பரை சுருட்டி சணல் கட்டி வண்டி கேரியரில் நைலானில் கட்டி கிளம்பினான். 3.50ற்கு இனாம்குளத்தூர் சென்றடைந்தான் வீரா. ஆசாரி தயாராய் அடுப்புகறி மூட்டம் போட்டிருந்தான். இளஞ்சிவப்பில் தயாராய் இருந்தது உலை. லாரி பட்டையை வாங்கி பார்த்தான்.

‘‘ஆஹா! தம்பி, நல்ல இரும்பு புடம்போட்டு அடிச்சா நல்ல பொருளா செய்யலாம்டா!‘‘ என வியந்து கூறினான். பட்டையை உப்புதாளில் நன்றாக தேய்த்து துருவை நீக்கி, உலைக்கூடத்தில் போட்டு மூடி விட்டு வெளியே வந்தான் ஆசாரி.

தம்பி, அருவா எதுக்கு அடிக்கிற? என ஆசாரி கேட்க, மௌனித்தான் வீரா, உடலில் பதட்டமும், பயமும் ஒருசேர எழும்ப திகைத்தான். அதனை உணர்ந்த ஆசாரி, வீராவை ஆசுவாசப்படுத்தி பேசினார்,

‘‘தம்பி நீ அரிவாள எதுக்கு வேணா வாங்கி போ, நா ஒன்ட்ட விளக்கம் கேக்க மாட்டேன், ஆனா என்ன உபயோகத்துக்குனு சொல்லிரு, ஏன்னா அதுக்கேத்த பதத்துல நா அடிப்பேன். மரம் இளநி வெட்றதா இருந்தா அருவா வாய அகலம் குறச்சி கணுவோட அகலத்தை அதிகப்படுத்துவேன், அது ஒரு 1000 வெட்டுக்கு மங்காம இருக்கும், அப்புறம் சானை புடிச்சா போதும். விவசாய வேலைக்கு கணு அகலத்தை குறைச்சி கொஞ்சம் கூராக்கி தருவேன்.

அடுத்ததா ஆசாரி எச்சி முழுங்கி மெல்ல பேசுனான்,

‘‘ஆள போடுறதா இருந்தா, அருவா கொண்டைய நல்லா வளைப்பேன். அப்போதான் பிடி இருக்கமா புடிக்கும், வெட்டு ஆழமா இறங்கும்‘‘,உனக்கு எந்த மாதிரி வேணும்னு கேட்டார் வீராவிடம்.

ஒரு பெரிய கைய போடனும் ஆங்நான், சம்பவம் எப்படினு சொல்றேன் கேளு, ஒரு வீச்சுல தலை சீவனும், அப்புறம் தடுத்தான்னா ஒரு ஏழெட்டு வெட்டு விழும். அதுக்கேத்த மாதிரி அடிச்சிகொடுன்னு சொல்லி முடித்தான் வீரா.

ஆசாரி கொஞ்சம் பயந்தவாறே, ‘‘தம்பி எப்படி? இந்த ஒரு சம்பவம்தானா? இல்ல,வரிசையா இருக்கா? ஏன்னா ஒரு சம்பவம்காரனுக்கும் அருவா அடிச்சிருக்கேன், அதே பொழப்பா திரிஞ்சவனுக்கும் அடிச்சி குடுத்திருக்கேன், ஒரு சம்பவம்னா அருவா நீளமா அடிச்சி அகலத்த குறைச்சிருவேன், நல்ல பகட்டா வெட்டிட்டு முனை மழுங்கும். அதிகபட்சம் 20, 30 வெட்டுவரை தரமா வெட்டும். அப்புறம் திரும்ப என்ட்டதான் வரணும், தொழில்காரனுக்குனா அருவா கொண்டைய அகலப்படுத்தி பிடியை நீளமா போடுவேன். அருவாமுனையையும் மொத்தமாக்கி, உலைல போட்டு அடிப்போம். அப்புறம் திரும்ப கொஞ்சம் சூட்டை இளக்கி, முனைய கூராக்கி திரும்ப உலைல போடுவோம், காலத்துக்கும் சானை குறையாது. 4, 5 சம்பவம் அப்புறம் அவிங்களே உரைகல்ல தேச்சா அழகா பதமாய்டும். உனக்கு எப்படி? என கேட்டான்.

வீரா தலைய மேல்நோக்கி அண்ணாந்தவாறே, தெரில ஆங்நான், எனக்கு ஒரு யோசனையும் இல்ல, ஒரு வெறில போறேன், ஆனா கண்டிப்பா சம்பவம் செஞ்சிதான் ஆவனும், செய்யபோறது பெரிய இடம்னால, கண்டிப்பா என் உயிருக்கு குறிவைப்பானுக, ஒரு சம்பவத்துல முடியிறது இல்ல, இதுக்கப்புறம் இன்னும் எத்தனை இழவு விழ போகுதோ? எவன் ஒச்சமா திரியப்போறானோ? இல்ல என்னையே காவு வாங்கப்போதோ? நீ,நல்லா தொழில்காரனுக்கு பண்ற மாதிரியே அடி, பணம் கொடுத்திடுறேன்னு கூறினான்.

ஆசாரி 2 நாள் நேரம் கேட்டான். சரியென விடைபெற்று அங்கிருந்து கிளம்பினான்.

முதலில் இதை யாரிடமும் கூறவில்லை, வீட்டுக்கு போய் 2 நாள் ஆச்சி, தன் நெருங்கிய கூட்டாளியான குணாவிடம் கூறி வீட்டை சமாதனப்படுத்தி வைத்தான். கொஞ்ச நாளைக்கு திருத்துறைப்பூண்டிக்கு போகுமாறு கூறி பணம் கொடுத்து தாயையும், அண்ணன் குடும்பத்தையும் அனுப்பிய பிறகே வீடு சென்றான். குணாவை வரச்சொல்லி பின் இருவரும் மது அருந்தினர். தனது திட்டத்தை குணாவிடம் கூற, முதலில் அதிர்ந்த குணா, பின் திட்டத்திற்கு சம்மதித்தான். அரை போதையில் திட்டம் தயாரானது.

காட்டூர் பகுதியில் பெரிய ரவுடி சிவா, காட்டூர் மட்டுமின்றி திருச்சி முழுக்க ரவுடித்தனத்தில் பேர் வாங்கியிருந்தான். 2 முறை குண்டாஸ், 14 செயின் திருட்டு, அடிதடி, மிரட்டல் என திருச்சியையே ஒரு கலக்கு கலக்கியிருந்தான். இவனோட அண்ணன் சந்திரன், இந்த கேங்கிற்கு மூளை இவன்தான், பல இடத்துல சம்பவம் பண்ண ஸ்கெட்ச் இவன் தான் முடிவு பண்ணுவான். குணா அளவிற்கு இவன யாருக்கும் தெரியாது, நெருங்கிய சிலரை தவிர அதுவே இவனுக்கு ஸ்கெட்ச் போட வசதியா இருக்கும், நல்ல கம்பீரமான உடம்பு, ஸ்போர்ட்ஸ்மேன் வேற, ஒருமுறை குணாவை கூட காப்பாத்தியிருக்கான். இவனை போட்டுத்தள்ள தான் வீரா திட்டமிட்டிருந்தான்.

ஏரியாவில் டோப்பு(கஞ்சா) போதைக்கு அடிமையான சிலரை பிடிச்சி சந்திரனை வேவுபாக்க அனுப்பியிருந்தான். அவர்களின் தகவல்படி, பொன்மலையின் பிரபல டீ கடையான காசிராஜன் டீ கடைக்கு அதிகாலை 4 மணிக்கு வருவான். அப்புறம் ரயில்வே ஜிம், 4 ரவுண்ட்கிரவுண்ட்ல ஓடிட்டு திரும்ப 6 மணியளவில் காசிராஜன் கடைக்கு வருவான்.

கிரவுண்ட்ல, ஜிம்ல ஆட்கள் இருப்பாங்க, டீ கடைல அதுவும் 4 மணிக்கு அவன் வரப்ப போடுறதுதான் சரியாயிருக்குமென திட்டமிட்டான். இரண்டு மூனுநாள் அவனே மறைமுகமாய் நோட்டமிட்டான். தன்னோட யமஹா சத்தம் சந்திரனுக்கு தெரியுமாதலால் 3 மணிக்கே வந்து அருகேயுள்ள ரயில்வே ஆஸ்பத்திரி காம்பவுண்டில் பதுங்கினார்கள் வீராவும், குணாவும்.

சந்திரன் நான்கு மணிக்கு டீ குடிக்கிறான். பத்து நிமிஷம் அங்க உக்கார்ந்திட்டு உடனே கிளம்பிடுறான். அந்த சமயம் அவன் கூடேயும் ஆட்கள் இருப்பதில்லை. அந்த சூழலில் சந்திரன், டீ மாஸ்டர் மட்டுமே! முக்கியமாய் அப்பொழுது பாதுகாப்புக்கு பொருள் ஏதும் எடுத்து வருவதில்லை, 6 மணியளவில் ரிட்டர்ன் வரப்போ, புல்லட்டில் அவனோட மச்சான் பிக்கப் பண்ணிட்டு போய்டுவான்.

குணாவும், வீராவும் அந்த வாரம் சனிக்கிழமை நாள் குறித்தார்கள் சந்திரனுக்கு, வெள்ளிக்கிழமை மாலையே ஆசாரியிடமிருந்து அரிவாளை வாங்கினான், நல்ல பளபளப்பாய் வாகாய் அருவா அடித்திருந்தான் நல்ல கனமும் கூட. ஓங்கி வெட்டினால் பலி உறுதி.

உயிரற்ற, உணர்வற்ற அந்த அரிவாள் ஓர் மூலையில் கிடத்தினால் காலம் முழுவதும் அங்கேயே கிடந்து துருப்பிடித்து மக்கிவிடும். தற்போது ஓர் வெறிபிடித்தவன் கையில் சிக்கியதால் அடிக்கடி இரத்தத்தால் இனி முலாம் பூச தயாராகியது.

அன்று இரவே இருவரும் இரு குவார்ட்டர் வங்கியிருந்தனர், இரவு முழுக்க தூக்கம் வராது வேர்த்துகொட்டியது இருவருக்கும். இரவு முழுவதும் பேசிக்கொண்டிருந்தனர்

மறுநாளின் திட்டம் குறித்து.

மணி 3 ஆகியது, இருவரும் சரக்கையும் அரிவாளையும் எடுத்துக்கொண்டு கிளம்பினர். அரிவாளை ஓர் வேட்டியில் சுருட்டி வைத்தான். யமஹாவை அன்று திட்டப்படி குணா இயக்கினான். ஆஸ்பத்திரி வரை இயக்கிய என்ஜினை அணைத்துவிட்டு நிப்பாட்டினர். அரிவாளை கையில் வைத்து மெல்ல ஆஸ்பத்திரி சுவரேறி உள்ளே குதித்து காத்திருந்தனர். நேரம் ஆக ஆக வீராவிற்கு வேர்த்து கொட்டியது. 3.50 ற்கு இருவரும் சரக்கினை உள்ளிழுத்தனர். மெல்ல போதையேற அதனோடு சேர்ந்து கொஞ்சம் கொஞ்சமாய் பயம் குறைந்து வெறியேறிய வீராவிற்கு 4 மணியளவில் காசிராஜனில் இளையராஜா பாடல் ஒலிக்க ஆரம்பிக்க ஓர் காலடிச்சத்தம் மெலிதாய் கேட்க முதலில் குணா பார்த்தான். மச்சான் வந்துட்டான்டா என மெல்ல குரலெழுப்பினான். வழக்கம்போல சந்திரன், வெளியில் உள்ள டீக்கடை பெஞ்சில் அமர்ந்து டீ ஆர்டர் செய்து மாலை பேப்பரை விரித்து வாசிக்க முதலில் குணா சத்தம் காட்டாமல் குதித்து முன்னேர பின்னாலிருந்து வேட்டியை விளக்கி அரிவாளை எடுத்து மெல்ல முன்னேறினான்.

டீயை வாங்கி அமர போன நொடியில் இருட்டிலிருந்து வேகமாய் வீரா வெளிவந்தான், கிட்டத்தட்ட 10 அடி தூரத்தில் சந்திரன் கவனித்துவிட, அதற்குள் அரிவாளை ஓங்கிவிட்டான், கையை அனிச்சையாக சந்திரன் மேலே தூக்க முதல்வெட்டு மணிக்கட்டில் பட்டு பாதி இடதுகை துண்டாக, நிலை தடுமாறி கடை கதவில் சந்திரன் குப்புற சாய்ந்தான், அடுத்ததாய் குறியை தலைநோக்கி செலுத்த தலை முக்கால்வாசி வெட்டி தொங்கியது, குணா அதை தூக்கிபிடிக்க மறுவெட்டில் எளிதாய் தலைதுண்டானது. வெறி அடங்காமல் தலையை குதறினான் வீரா, மூளை பிய்ந்து தொங்கியது! அரிவாள் கொண்டையில் தலையை கொத்தி நடந்துவந்து பொன்மலை ரயில்வே தொழிலக வாசலின் முன்கதவின் ஓர் இரும்புக் கம்பத்தில் தலையை நட்டுவைத்து வந்தான்.

திருச்சியை அலர வைத்த ஓர் சம்பவத்தை எளிதாய் நடத்தி, வண்டியில் ஏறினான் திருச்சியை மட்டுமல்ல டெல்டாவையே கலங்கடிக்க போகும் ரவுடி.

--

திருச்சி பார்த்தி

# பக்கத்து வீடுகள்



செந்தில்குமரன்
மன்னார்குடி

'வீட்டை கட்டிப் பார், கல்யாணம் செய்து பார்' என உசுப்பேத்தியே இந்த சமூகம் கட்டமைக்கப்பட்டுள்ளது. கல்யாணத்தை பற்றி அடுத்த இதழில் பேசுவோம்.

வாடகை வீட்டில் இருந்தாலும் சரி, சொந்த வீட்டில் இருந்தாலும் சரி, பக்கத்து வீடுகள் சரியாக இருந்தால் தான் நாம நிம்மதியா இருக்க முடியும். ஏதாவது சின்ன பிரச்சனைகள் வந்தாலும் இந்தியா - பாகிஸ்தான் அளவுக்கு எல்லைகள் பிரிக்கப்பட்டு நீ இங்க வர கூடாது, அங்க நிற்க கூடாது னு கடுமையான சட்டங்கள் உருவாக்கப்படும்.

வாடகை வீடாக இருந்து, இது போன்ற பிரச்சனைகள் இருப்பின், வீட்டை காலி செய்து கொண்டு போய் விடலாம். அதே சொந்த வீடாக இருந்து பக்கத்து வீடுகள் பிரச்சினைகளோடு அமைந்தால் ரொம்ப கடினம். ''பொறுத்தார் பூமி ஆள்வார்'' னு மனதில் வைத்துக் கொண்டு, சகித்துக் கொண்டு சென்றால் சகலமும் சுபம்.

இப்படியாக பக்கத்து வீட்டில் இருந்து அவர்கள் செய்த உணவுப் பண்டங்கள் ஏதாவது ஒன்றை ஒரு பாத்திரத்தில் நமக்கு கொடுத்து அனுப்புவார்கள். அந்த பாத்திரத்தை நாம் திருப்பி தரும்போது நாமளும் ஏதாவது ஒன்றை அதில் நிரப்பி தான் தருவோம். வெறும் பாத்திரத்தை யாராச்சும் கொடுப்பாங்களானு சொல்லிட்டே, எதையாவது கொடுத்து அனுப்புவோம்.

தொலைக்காட்சிகளில் வரும் சமையல் நிகழ்ச்சிகளை பார்த்து விட்டு முயற்சிக்கப்படும் புதுவகையான உணவு வகைகளுக்கு காரசாரமான விமர்சனம் தருபவர்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள் தான்.

ஏதையாவது உருட்டி பிசைந்து எண்ணெயில் பொரித்து வீட்டில் உள்ள வாண்டுகளிடம் பக்கத்து வீட்டில் கொடுக்க சொல்லி கொடுத்து அனுப்புவார்கள். அத்தை, அம்மா கொடுத்துட்டு வர சொன்னாங்கனு கொடுத்துட்டு போய்டும், சில வாண்டுகள் தட்டு இப்பவே வேணும்னு கேட்கும், நாங்களும் அதை தின்றுவிட்டு, கொடுத்தனுப்பிய தட்டில் பதிலுக்கு எங்கள் வீட்டில் செய்ததை, எதுவுமே செய்யவில்லை என்றாலும் சர்க்கரையாச்சும் நிரப்பி அனுப்பி வைப்போம்.

10 வருசத்துக்கு முன்னாடியெல்லாம், வீட்டில் தயிர் உறை ஊற்ற வேண்டுமென்றால் பக்கத்து வீட்டில் சிறிய டம்ளரில் கொஞ்சம் வாங்கி, அதில் ஊற்றி வைத்துக் கொள்வார்கள். அத் போலவே உப்பு, சர்க்கரை, பச்சை மிளகாய், இஞ்சி என சிறு சிறு பொருள்கள் அடங்கும்.

இப்ப அது மாதிரியான பண்டமாற்று நடவடிக்கைகளை எல்லாம் பார்க்க முடிவதில்லை. தயிர் உறை ஊற்ற இல்லைனா கடையில் வாங்கி கொள்ளலாம் என்ற எண்ணம் தான் வருகிறது.

இதில் பார்த்தீர்கள் என்றால் பக்கத்து வீட்டுக்காரர்களை மாமா, அத்தை என கூப்பிட்டு பழகி இருப்போம். அவர்களது பிள்ளைகளை அண்ணா, அக்கா னு கூப்பிடுவோம். காலப்போக்கில் Uncle, Aunty என இப்போது மாறி விட்டது. தற்போது பக்கத்து வீட்டுக்காரர்களையோ, தெரிந்தவர்களது பெற்றோர்களையோ மாமா, அத்தை என்று கூப்பிட்டால் ஒரு மாதிரியாக தான் பார்க்கிறார்கள். அதுவும் கூப்பிடுபவர் ஆணாக இருந்து, அவர்களுக்கு ஒரு பெண் பிள்ளை இருந்தால் அவ்வளவு தான். அதே Uncle, Aunty என அழைக்கும் போது அந்த பார்வையோ, யோசனையோ தோன்றுவதில்லை.

அப்படியாகப்பட்ட பக்கத்து வீடுகள் இன்றும் இருக்கிறதா என தெரியவில்லை. சென்னையில் மட்டும் தான் பக்கத்து வீடுகள் பூட்டப்பட்டே இருக்கும் என்ற வேத வாக்கு, ஊரெங்கிலும் பரவி விட்டதாகவே தோன்றுகிறது.

பக்கத்து வீடு அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்.

--

## இரா. செந்தில் குமரன்
மன்னார்குடி




ஆதவன் கற்பகம் விஜயகுமார்
Campbell School of Innovation
சான் ஒசே,
அமெரிக்கா

# நிலநடுக்கமும் கட்டுமான விளம்பரமும்



பாலாஜி பிரசாத்


தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இடைவெளியில் நமக்கு பல விளம்பரங்கள் காட்டப்படும். அதில் ஒரு பிரபலமான ஒருவர் வந்து அந்த பொருளை பெருமையாக கூறி அந்த பொருளை நாம் வாங்கியே ஆக வேண்டும் என்ற நிலைக்கு தள்ளும் அளவுக்கு அடிக்கடி காட்டப்படும். முன்பு இந்த விளம்பர யுக்தி பற்பொடி, சோப்பு என்ற அளவில் இருந்தது. இன்று, இது மருந்து, மருத்துவமனை தொடங்கி வீட்டு மனை, இன்று அடுக்குமாடி கட்டுமானம் வரை வளர்ந்து நிற்கிறது. கட்டுமானத்திற்கு பயன்படும் கட்டுமான பொருட்கள் ஆன செங்கல், சிமெண்ட், கம்பி, பெயிண்ட் வரை விளம்பரப்படுத்தப்படுகிறது. இந்த விளம்பரம் வந்த பின் அந்த பொருட்களின் வியாபாரம் சூடுபிடிப்பதும் இன்றைய சூழலில் மறுக்க முடியாத உண்மை. இது அனைவருக்கும் தெரிந்த ஒன்று தானே அதற்கும் இந்த கட்டுரைக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்க தோன்றும். ஒரு பொருளை சந்தைக்கு அறிமுகம் செய்ய வேண்டும் என்ற நிலையில் இருந்து விலகி தரம் இருக்கோ இல்லையோ முழுக்க முழுக்க வியாபார நோக்கில் கட்டுக்கதைகளை மக்கள் மனதில் ஆணித்தனமாக பதிய வைக்க ஒரு அங்கமாகவே இந்த ஊடக விளம்பரம் இன்று ஒரு கருவியாக மாறி இருக்கிறது. இது மக்களான நம்மிடையே ஆழமான நம்பிக்கையாக மாறுகிறது. உண்மையில் தரமான எந்தவொரு பொருளுக்கும் விளம்பரம் தேவையில்லை என்பது என் கருத்து.

இந்த கம்பி வாங்குங்க, அந்த கம்பி வாங்குங்க, இது பூகம்பத்தை தாங்கும், சுனாமிக்கே சவால் விடும். இந்த சிமெண்ட் பயன்படுத்தினால் உறுதியாக நீடித்து தலைமுறை தலைமுறையாக நிற்கும் என்பது போன்று கட்டுமான பொருட்களுக்கு இருந்து வந்த விளம்பர நிலை தாண்டி தற்போது அடிக்கடி நான் பார்க்கும் சில விளம்பரம் என்னை வெகுவாக சிந்திக்க வைத்தது. அதுவே கட்டிடங்களை வடிவமைக்கும் பொறியாளன் என்ற முறையில் சில கருத்துகளை இந்த கட்டுரை வாயிலாக பதிவிட விரும்புகிறேன். அது ஒரு கட்டுமான வீட்டு விற்பனைக்கான விளம்பரம். அதில் அவர்கள் தெரிவிக்கும் செய்தி இது எந்த வித பூகம்பம் வந்தாலும் தாங்க கூடியது, இந்திய தரசான்று ஆணைய வழிமுறை படிகட்டியது (Indian standard (IS) code). அதாவது Earthquake proof building என்று பரப்புரை செய்கின்றனர். அதாவது எந்த விதமான நில அதிர்வும் வந்தாலும் ஒன்றும் ஆகாது என்பது அவர்களது விளம்பரம். இதை பார்க்கும் நம்மில் பலரும் இது மாதிரி ஒரு கட்டுமானம் உண்டோ என்று புகழ கேட்டேன். இதன் உண்மை நிலை என்ன அது அதில் அவர்கள் குறிப்பிடுவதுபோல உண்மையில் சாத்தியமா? என்று ஒரு தெளிவுநிலை நோக்கிய பயணம் இந்த கட்டுரை.


உண்மையில் இந்திய தர சான்று படி வடிவமைத்தல் என்ன நடக்கும் என்பதை இங்கு

பார்க்கலாம். ஒட்டுமொத்த இந்தியா வரைபடத்தை 5 பகுதிகளாக பிரித்து அதில் 1 மற்றும் இரண்டாம் பகுதி (zone) ஒரு பிரிவாகவும் மீதி மூன்றும் ஒவ்வொரு ஒரு பிரிவாக நான்கு பகுதியாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் முறையை 12 பிரிவில், 5 ரிக்டர் அளவுக்கு கீழ் தான் நிலநடுக்கம் வர வாய்ப்பு. 3ம் பகுதி 6 ரிக்டர் குள், 4ம் பகுதி 7 ரிக்டேர் மற்றும் 5ம் பகுதி 8 அல்லது அதற்கு மேலும் வரலாம் என்பதாகும். இந்த பிரிவுக்கான அடிப்படை கடந்த 2500 ஆண்டுகாலமாக அந்த இடத்தில் இதற்கு முன் இருந்து 2016ம் ஆண்டுவரை வந்த நிலநடுக்க ஆவணத்தை பொறுத்த கணிப்பு. சென்னை 3ம் பகுதிக்குள் வருகிறது. தமிழக எல்லை பொறுத்தவரை அதுவே அதிகபட்சம். இமயம் இருக்கும் காஷ்மீர் பகுதி அதிகபட்ச வரைமுறை பகுதியான 5இல் வரும். நான் மேலேகூறிய பகுதி சார் பிரிவு இங்கு கிழே இணைக்கபட்ட படம் 1 மற்றும் 2 இதை எளிதாக புரிந்து கொள்ள உதவும் என்று எண்ணுகிறேன். (படம் உதவி விக்கிபீடியா)

படம் 1




படம் 2




மேற்கொண்டு இந்த கட்டுரையில் பயணிக்கும் முன் நான் ரிக்டர் அளவுகோல் என்று ஒன்றை கூறினேன். இது என்ன என்று சுருக்கமாக இங்கு புரிந்து கொண்டால் தான் நான் மேலே கூறியதோ அல்லது பின்னர் விளக்க முயலும் கருத்தும் எளிமையாக புரிந்து கொள்ள உதவும். நாம் வாழும் பூமியில் அழுத்தம் காரணமாகவோ, நிலச்சரிவு அல்லது கண்ட நகர்வு (continental drift) காரணமாகவோ, எல்லையில்லா ஆற்றல் (energy) வெளிப்படுகிறது. அப்படி வெளிப்படும் ஆற்றல் அளவு நாம் கற்பனை செய்து கூட பார்க்க முடியாத அளவு இருக்கும். உதாரணமாக ரிக்டர் அளவுகோலில் 5 என்று எடுத்து கொண்டால் 477 டன் (1டன்=1000கிலோ) எடை கொண்ட TNT என்று சொல்ல கூடிய வெடிகுண்டு (Bomb) வெடித்தால் ஏற்படுத்தும் அழிவுக்கு சமமான ஆற்றல் வெளிப்படும். சாதாரணமாக இந்த

வெடிபொருள் பயன்பாட்டின் எடை 1கிலோவுக்கும் குறைவு எனில் 477 டன் ஏற்படுத்தும் அபாயம் கொஞ்சம் சிந்தித்து பாருங்கள். இதுவே 6 எனில் 15 கிலோ டன் அதாவது 5 ஐ விட 6 என்பது தோராயமாக 31 மடங்கு அதிகம். இப்படி ஒரு ஒரு ரிக்டர் 30 முதல் 32 மடங்கு அதிகம். ஒரு ரிக்டர் மாறும்போது அது ஏற்படுத்தும் விளைவு சிந்தித்தால் கொஞ்சம் மிரட்சியாகவே இருக்கும். இந்த ஆற்றல் மாற்றத்தின் வீரியம் மற்றும் தாக்கத்தின் அளவுகோல் பற்றி ஒரு தெளிவுநிலை இல்லாமையால் செய்திகளில் நிலநடுக்கம் வந்தது பற்றியும் ரிக்டர் அளவுகோல் பற்றியும் செய்தி வரும்போது நாம் அதை ஒரு செய்தியாக பார்த்து கடக்கிறோம் ஆனால் அது ஏற்படுத்தும் சேதம் பற்றி அதிகம் தெரிவது இல்லை.

இப்போது கட்டமைப்பு வடிவ முறையின் குறைந்த பட்ச நோக்கம் என்ன என்பதை பற்றி பார்ப்போம். இது 3 பிரிவாக உள்ளது

1. குறைந்த பட்ச நிலநடுக்கம் 4 ரிக்டர் குறைவாய் வந்தால் எந்தவித சேதம் இன்றி கட்டிடம் இருக்க வேண்டும்.

2. 4க்கு மேல் அந்த பகுதிக்கு வரையறுத்த அளவுக்குள் இருப்பின் கட்டிடத்தில் சில தெறிப்புகள், சிறு சேதங்கள் மறு சீரமைப்பு செய்யும் அளவில் இருக்கலாம்
3. வரைமுறை அளவை தாண்டி வந்தால் கட்டிடம் சீர் செய்ய முடியாத அளவுக்கு பாதிப்பு உண்டானாலும் இடிந்து விழுந்து உயிர் சேதம் ஏற்படக்கூடாது என்ற இந்த மூன்றும் குறைந்தபட்சம் அந்த கட்டிடத்தை வடிவமைக்கும் பொறியாளரின் தலையாய கடமை.

மேலே நான் கூறியது தான் இந்திய தர சான்று குறிப்பிடுகிறது. அதாவது கட்டிட சேதம் தவிர்க்க முடியாதது. ஆனால் உயிர் சேதம் தவிர்க்கப்பட வேண்டும். Earthquake resistance building not earthquake proof building. உதாரணமாக bullet proof என்று கூறுவர். அதாவது குண்டு துளைக்க கூடாத அதை அணிந்தால் உடைக்கும் கூட சேதப்படுத்தாது என்று பொருள். ஆனால் அதுவே resistance என்று வந்தால் உடைக்கு சேதம் இருக்கும் ஆனாலும் அணிந்தவர் உயிர் காக்க முடியும். ரெண்டும் ஒரே வேலை தான் செய்கிறது ஆனால் முதலாவது அந்த சம்பவம் நடந்த பின்னும் பயன்பாட்டில் இருக்கும். இரண்டாவது உடனே முழுமையாகவோ பகுதியாகவோ பயன்படுத்த முடியாது. இனி யாரும் தங்களிடம் விளம்பரம் செய்தால் நான் கூறியதை ஒருமுறை சிந்தித்து முடிவெடுங்கள். நிலநடுக்கத்தால் உயிர் சேதம் ஏற்படுவதில்லை. நாம் கட்டும் கட்டுமானத்தின் தரமே, உயிர் சேதத்தை ஏற்படுத்துகிறது என்பதுவே தவிர்க்க முடியாத உண்மை. ஆனால் விளம்பரங்கள் கூறுவது எவ்வளவு பெரிய நிலநடுக்கம் வந்தாலும் கட்டிடம் சேதம் ஆகாது (damage proof) என்பது பொய்யா உண்மையா என இப்போது நம்மால் எளிதில் உணர முடியும் என்று உறுதியாக நம்புகிறேன். இந்தியாவில் உள்ள பெருநகரங்களில் 6 என்ற எண்ணிக்கை அளவில் ஒரு நிலடுக்கம் வந்தால் கூட 70% மேலான கட்டிடம் சேதம் அடையும் அளவுக்கு உள்ளதாக இருக்கிறது என்பது இந்த துறை சார்ந்த வல்லுனர்களின் கருத்து.

2004ம் ஆண்டு நம்மால் மறக்க முடியாது அதற்கு காரணம் ஆழிபேரலை (சுனாமி). அதற்கு காரணம் அது உருவாக்கிய பேரழிவும் உயிர்சேதமும் தான். அதை உருவாக்கிய நிலநடுக்கம் அளவு 9.0 ரிக்டர். இப்போது நம்மால் எளிதில் அதன் ஆற்றலை மேலே கூறிய தகவல்

மூலம் எளிதாக கற்பனை செய்து பார்க்க முடியும். தமிழகத்தில் நாகை, கடலூர், சென்னை மற்றும் கடலோர பகுதி சந்தித்த அழிவை நாம் அறிவோம். அதைக் காட்டிலும் சங்க காலத்தில் இரண்டு கடல்கோல் ஏற்பட்டு பெரும் நிலம் முழுகியது எனில் அதற்கு காரணமான நிலநடுக்கமோ அல்லது அதனால் உருவான ஆழிபேரலையோ (சுனாமி) நம்மால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை.

இன்று நாம் பயன்படுத்தும் நிலநடுக்க தாங்குதிறன் கட்டுமானங்கள் பற்றிய அறிவு கடந்த 20ம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் மலர்ந்தது என்றும், மேலைநாட்டு அறிவியல் வளர்ச்சியால் வந்ததாகவும் இன்று நாம் நம்ப வைக்கப்படுகிறோம். அதுவே இன்றைய நம் கல்வி தமக்கு தரும் வரலாறு. ஆனால் நம் தமிழ், தமிழகம் பொறுத்தவரை மேலைநாடுகள் கூறும் நிலநடுக்க தாங்குதிறன் கட்டுமான அறிவியல் வளர்ச்சிக்கான வரலாறு மற்றும் காலம் சற்று ஏற்புடையதாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதற்கு காரணம் இன்று அதிநவீன வளர்ச்சி அடைந்த பின்னும் நமது மேலைநாட்டு அறிவியலால் சுனாமியோ நிலநடுக்கமோ எந்த இடத்தில் எந்த நேரத்தில் வரும் என்று துல்லியமாக கணித்து கூற இயலாத நிலையில் தான் இன்றும் இருக்கிறோம் என்பது யாரலும் மறுக்க முடியாத உண்மை. ஆனால் தஞ்சாவூர் பெரிய கோவில், மதுரை மீனாட்சி அம்மன் கோவில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில் என பல இன்றும் பல ஆயிரம் வருடம் கடந்து மக்கள் பயன்பாட்டில் இருக்கிறது. என்னடா இது அவர்கள் அனைவரும் ஆன்மிக நோக்கில் கோவில் கட்டி இருக்கிறார்கள் என சிலர் கேள்வி கேட்பது புரிகிறது. ஆனால் அது மட்டும் அல்ல நம் முன்னோர்களின் நோக்கம் அவர்கள் கட்டியதன் நோக்கம் மக்கள் பாதுகாப்பு மற்றும் மக்கள் பலன் இன்றி எந்தவொரு கட்டுமானமும் தமிழ் மன்னர்கள் வீணாக கட்டமைக்கவில்லை என்பதற்கு உதாரணம் பல உள்ளன அவற்றில் கோவில் கட்டுமானம் ஒரு சான்று. இன்று நாம் பேசும் தலைப்பான நிலநடுக்கமாக இருக்கட்டும் சென்ற ஆண்டு வந்த கஜா புயல் போன்ற பேரிடர் அபாயங்கள் ஏற்படும்போதும், 2015 சென்னை பெருவெள்ளம் போன்று மற்றும் பிறநாட்டு மன்னர்களின் படையெடுப்பு போன்ற அவசர காலகட்டத்தில் மக்களை பாதுகாப்பாக ஒரு இடத்தில் வைக்க அமைக்கப்பட்டதே ஆகும்.

கோவில் கலசத்தில் நெல் போன்று பல தானியங்கள் வைக்கப்பட்டு பின் ஆபத்து காலத்தில் மக்கள் பயன்பாட்டிற்கு தரப்பட்டது. அதுமட்டுமின்றி விதை நெல்லும் இந்த கலசத்தில் பாதுகாக்கப்பட்டது. வெள்ளத்தில் பயிரிட்ட நெல் அழிந்தாலும் கூட அதை மீண்டும் மீட்க இயலும் என்ற உயரிய எண்ணம். ஒரு விதை நெல்லின் காலம் தோராயமாக 12 வருடம். அதனாலே அதை மாற்றும் சடங்காக கலசம் எடுத்து அதில் புதுநெல் வைத்து விழா கொண்டாடப்பட்டது ஆனால் இந்த அறிவியல் அறிவு இழந்து இன்றும் அது வெறும் சடங்காக குடமுழுக்கு என்ற நிலையில் மட்டுமே மதம் சார்ந்த சடங்காக உள்ளது. மதம் சாதி பாகுபாடு இன்றி தமிழன் என்ற ஒரே உணர்வோடு வாழ்ந்த நம் முன்னோர்கள் வழி வந்த நாம் இன்று அவர்கள் அறிவியல் அறிவை இழந்து மேலைநாட்டின் அறிவுக்கு மயங்கும்நிலையில் உள்ளோம்.

தஞ்சாவூர் பெருவுடையார் கோவில் தனது 1008+ வருட காலத்தில் நமக்கு தெரிந்து 6 நிலநடுக்கத்தை சந்தித்துள்ளது. இன்றும் பயன்பாட்டில் உள்ளது எந்த பெரிய சேதமும் இன்றி. அது எப்படி சாத்தியம் என்று பன்னாட்டு வல்லுநர்கள் இன்றும் தலையை

பிய்த்துக்கொண்டு இருக்கின்றனர். அதேபோல மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கட்டி 3000+ பழமை வாய்ந்த ஒன்று எனும் போதும், கரிகாலன் கட்டிய கல்லணை 2000ம் ஆண்டு தாண்டி இன்றும் பயன்பாட்டில் இருக்கிறது என்பதும் இவ்வுலகம் அறிந்த உண்மை. இதை தாண்டி வேறென்ன ஆதாரம் வேண்டும். சங்க பாடல்களில் சுனாமி (ஆழி பேரலை) பற்றி குறிப்புள்ளது. 2004 வந்ததை காட்டிலும் கடுமையான ஒன்று வந்து பூம்புகார், தனுஷ்கோடி, கடல் கொண்ட குமரி (குமரிக்காண்டம்) நம் முன்னோர்கள் சந்தித்து அதில் இருந்து பல படிப்பினை மூலம் தொழில் நுட்பம் வகுத்துள்ளார்கள். நம் முன்னோர்கள் கட்டிய கட்டுமானம் இன்றும் அவர்கள் பொறியியல் திறனை பறைசாற்ற உயிர்ப்போடு இருக்கிறது ஆனால் அந்த கட்டுமான அறிவு இன்று நம்மிடத்தில் இல்லை. இது நம் அறியாமையால் நாம் அழித்துக்கொண்டு இருக்கிறோம். வேற்று மொழி அறிவு சிறந்தது என கொடி பிடிக்கும் நம்மில் சிலர், நம் குழந்தைகளை நம் தாய்மொழி கல்வி கற்பதை விட பிறமொழியில் கல்வி கற்பதை பெருமையாக என்னும் சூழலில் வாழ்கிறோம். தமிழ் மொழியில் பொறியியல் அறிவுக்கு வாய்ப்பு குறைவு என கருதி வேற்றுமொழி படிக்கும் நம் அனைவருக்கும் இந்த கட்டுரை சற்று சிந்திக்க தூண்டும் என்று எண்ணுகிறேன்.

இன்றளவும் ஒரு தெளிவான புரிதல் இல்லாத ஒரு பகுதி இந்த நிலநடுக்கம் தாங்கும் கட்டிட கட்டுமானம், நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவுக்கு. ஆனால் 1ம் நூற்றாண்டில் சீனர்கள் மத்தியில் நிலநடுக்கம் பற்றிய ஒரு புரிதல் இருந்துள்ளது. அதற்கு ஆதாரமாக கீழே உள்ள படம் 3. இது நிலநடுக்க அலை பயணிக்கும் திசை அறிய அந்த காலத்தில் பயன்படுத்திய ஒரு கருவி. அப்படி என்றால் அவர்களை காட்டிலும் நம் முன்னோர்கள் அதை பற்றி நன்கு பரிச்சயமான ஒன்று என்பதற்கு ஆதாரமாக அவர்களின் கட்டுமானம் இன்றும் இருப்பதுவே சான்று என்று முன்பே விளக்கினேன். தமிழரின் கட்டுமான அறிவை மீட்டு எடுக்கும் பட்சத்தில் நம் முன்னோர்கள் போன்றே நாமும் உலகுக்கு பாடம் கற்பிக்கும் காலம் வெகு தூரம் இல்லை.

படம் 3



**பாலாஜி பிரசாத்**
மன்னார்குடி

# கையில் ஏந்த காத்திருக்கிறேன்!

கனவோடு காத்திருக்கிறேன்..
திருமணம் முடிந்த சில நாட்களில் இருந்து எப்போது நீ என்னுள்
முளைப்பாய் என்று

நீ முளைத்தாய் என்று தெரிந்தவுடன் முதல் மூன்று மாதங்களில் எப்போது
நீ துளிர்வாய் என்று காத்திருந்தேன்

நீ நன்றாக துளிர்ந்து வருகிறாய் என்று தெரிந்தவுடன் பிறகு வந்த மூன்று
மாதங்களில் எப்போது நீ வளர்வாய் என்று காத்திருந்தேன்

இப்போது நீ நன்றாக வளர்ந்து வரும் நிலையில் இனி வரும் மாதங்களில்
எப்போது நீ மலர்ந்து என்னை பார்த்து சிரிப்பாய் என்று காத்திருக்கிறேன்

காத்திருப்பு சில நேரங்களில் எனக்கு கசந்தாலும் உன்னை
பொறுத்தவரை இதில் எனக்கு மிக பெரிய மகிழ்ச்சியே

காத்திருப்பு காதலாகிறது ..
காதலோடு காத்திருக்கிறேன் என் செல்லமே!



திவ்யா வசந்தன்

என் தேரில்
நாளை வரப்போவது
நீயாகவும் இருக்கலாம்,
எக்கணமும்
ஆயத்தமாக இருப்பது
உத்தமம்.
உனக்கான பயணத்தை
வேறு எவருக்காகவும்
என்னால்
பரிந்துரைக்கலாகாது.
வரவேற்புகள்
நீ எதிர்பார்த்ததை விட
அதிவிமரிசையாக இருந்தால்
அது உன் பேறு.
அவ்வமயம்
பெரியவர் சிறியவர்
நண்பன் எதிரியெனவும்
பாலின பாகுபாடின்றி
மரியாதை நிமித்தம்
கிடைக்கப் பெறலாம்.
இது
இறுதி யாத்திரையென்று
அனைவராலும் சொல்லக் கூடும்.
உன் அபிப்பிராயங்கள்
எதுவும் ஏற்கப்பட மாட்டாது.
எல்லாமும் இழந்த
உயிரற்ற சடலத்தை எல்லோரும்
அப்போது பிணமென்று
சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

விதையா இருக்கும்
என்னை உணவாக்க
ஒருநாளும் நான்
அனுமதிக்க மாட்டேன்.
யாரை நம்பி
களமிறங்கப் போகிறாயென
நீ கேட்பது
என் செவிப்பறைக்குள்
விழாமலில்லை.
என் பூமித்தாய் இருக்கிறாள்
அவள் மடியில் விழுந்து
என் குருதியை
நீரென வார்த்து
விருட்சமாகிக் கொள்கிறேன்.
அங்ஙனம்
இயலாமல் போனால்
ஓர் ஆதிச் சுயம்பாய்
என்னை நான் பிரவாகம்
எடுத்துக் கொள்கிறேன்.



பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602
அலைபேசி: 9443139353.

# Schedule - J 51

Drugs and Cosmetics Act, 1940, 1945, 1995, Schedule J contains a list of 51 disease and ailments (by whatever name described) which a drugh may not purport to prevent or cure or make claims to prevent or cure.

மருந்துகள் மற்றும் அழகு சாதனங்கள் சட்டம் 1940ல் இயற்றப்பட்டு பின்னர் 1945, 1995ல் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இந்த சட்டத்தில் ஷெட்யூல் - J என்ற பிரிவின் கீழ் 51 வகை ஆங்கில மருத்துவத்தின் வியாதிகள் எழுதப்பட்டுள்ளன. இந்த வியாதிகள் 'ஆங்கில மருத்துவத்தின் மருந்துகளைக் கொண்டு குணப்படுத்த முடியும்! என்றோ, மருந்துகளைக் கொண்டு குணப்படுத்திக் காட்டுகிறேன்! என்றோ கூறுதல் கூடாது என்று எச்சரிக்கிறது.

நோயால் வாடும் மக்களின் நன்மைக்காக, அவர்கள் உயிர்களும், உடைமைகளும் காக்கப்பட வேண்டும் என்பதற்காக நமது அரசாங்கம், ஆங்கில மருத்துவத்தால் குணப்படுத்த முடியாத நோய்கள் மொத்தம் 51 என்று மேற்சொன்ன சட்டத்தில் ஷெட்யூல் - Jயில் வலியுறுத்தியுள்ளது. இந்த 51 வியாதிகளையும் ஆங்கில மருத்துவர்கள் எவரும் தங்கள் மருந்துகளால், குணப்படுத்த முடியும் என்றோ, குணப்படுத்திக் காட்டுகிறேன் என்றோ கூறுவது சட்டப்படி குற்றமாகும் என்று எச்சரிக்கிறது.

நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக புதுப்புது நோய்கள் இந்த லிஸ்ட்டில் சேர்ந்து கொண்டே இருக்கிறது.

இவ்வாறாக, ஆங்கில மருத்துவம், தான் கண்டுபிடித்த நோய்கள் ஒவ்வொன்றையும் ஆதி முதல் அந்தம் வரை ஒவ்வொன்றாக அவற்றைக் குணப்படுத்த மருந்துகள் இல்லை என்பதை தெளிவாக உணர்ந்து இதை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காக ஆங்கில மருந்துகளில் எந்த ஒரு மருந்தும் நோய்களைக் குணமாக்காது என்பதை அந்த மருத்துவம் சர்வதேச அளவில் ஒப்புக்கொண்டு அதை பகிரங்கமாக அச்சிட்டிருக்கிறது.

ஆங்கில மருத்துவம், இந்த 51 நோய்களுக்கும் குணப்படுத்தவோ தடுக்கவோ, கட்டுப்படுத்தவோ மருந்துகள் இருக்கிறது என்று கூறுவது தவறான, ஆபத்தான போக்கு. நோயால் அவதியுறும் மக்களுக்கு பெரும் ஆபத்தாக முடியும் என்பதை எச்சரிப்பதற்காகவும், உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுரையின் பேரில் நமது அரசாங்கமும் தகுந்த எச்சரிக்கையுடன் ஆங்கில மருந்துகளை மருந்துகள் மற்றும் அழகு சாதனங்கள் சட்டத்தின், பிடியில் ஷெட்யூல் -Jயில் ஆங்கில மருத்துவம் வைத்தியம் பார்க்கக் கூடாது என்று 51 நோய்கள் அடங்கிய பட்டியலைச் சேர்த்திருக்கிறது

(குறிப்பு: இந்த பட்டியலில் இன்று எல்லா நோய்களும் அடங்கும்.. விபத்துகள், விஷகடிகள், ஒட்டி பிறக்கும் குழந்தை பாதிப்புகள் ஆகிய அவசரகால நிவாரணங்களுக்கு மட்டும் தற்காலிகமாக ஆங்கில மருத்துவம் அவசியமாகிறது)

ஷெட்யூல் J-யில் ஆங்கில மருத்துவம் வைத்தியம் பார்க்கக் கூடாது என்று வரையறுக்கப்பட்டுள்ள 51 நோய்களில் விவரம் வருமாறு.

1. எய்ட்ஸ்
2. நெஞ்சுவலி
3. அப்பெண்டிஸ் என்னும் குடல் வால் நோய்
4. இருதய இரத்தக் குழாய்களில் அடைப்பு
5. தலை வழுக்கை
6. கண்பார்வை அற்ற நிலை
7. ஆஸ்துமா
8. உடலில் தோன்றும் கட்டிகள் முதலாக புற்றுநோய் வரை
9. கண்புரை
10. தலைமுடி வளர, நரையை அகற்ற
11. கருவில் வளரும் குழந்தையை ஆணாகவோ, பெண்ணாகவோ மாற்றுவோம் என்று கூறுவது.
12. பிறவிக் கோளாறுகள்
13. காது கேளாமை
14. நீரிழிவு நோய்
15. கர்ப்பப்பை சம்பந்தமான அனைத்துக் கோளாறுகள்
16. வலிப்பு நோய் - மன நோய்கள் அனைத்தும்
17. மூளைக்காய்ச்சல்.
18. உடல் நிறம் கருப்பாக இருப்பினும் சிகப்பாக்குதல்.
19. மார்பக வளர்ச்சிக்கு
20. புரையோடிய புண்
21. மரபணு நோய்கள்
22. க்ளாகோமா எனும் கண்வலி நோய்
23. கழுத்து (தைராய்டு) வீக்கம்
24. ஹெர்னியா எனும் குடலிறக்க நோய்
25. அதிக மற்றும் குறைவான இரத்த அழுத்தம்
26. விரை வீக்கம்
27. பைத்தியம்
28. ஞாபக மறதி, ஞாபக சக்தியை அபிவிருத்தி செய்ய.
29. குழந்தையின் உயரத்தைக் கூட்ட.

30. சாதாரணமாக ஏற்படும் கண்பார்வைக் குறைபாடுகள் கிட்டப்பார்வை, தூரப்பார்வை.
31. ஆண் உறுப்பு வளர்ச்சி, வீரியம்.
32. பற்களை உறுதிப்படுத்த என்று, கால்ஷியம் மருந்துகள் மூலமாக வைத்தியம் பார்ப்பது.
33. மஞ்சள் காமாலை, கல்லீரல் மர்ம நோய் (ஹெபடைட்டிஸ்), மற்றும் கல்லீரல் சம்பந்தப்பட்ட எந்த நோய்களும்
34. இரத்தப் புற்றுநோய்.
35. வெண் குஷ்டம்
36. உடலுறவில் வீரியம் அதிகப்படுத்துதல்.
37. மூளை வளர்ச்சிக்குறைவு.
38. மாரடைப்பு நோய்
39. குண்டான உடம்பு மெலிய
40. பக்க வாதம்
41. உடம்பு முழுவதும் நரம்பு நடுக்க நோய்
42. மூல நோய் மற்றும் பவுத்திரம்
43. வாலிப சக்தியை மீட்க
44. குறைந்த வயதில் முதிர்ச்சியடைந்த தோற்றம்
45. குறைந்த வயதில் தலை நரை
46. ரூமாட்டிக் இருதய நோய்
47. ஆண்மைக்குறைவு, விரைவில் ஸ்கலிதம்
48. கழுத்து வலி, மற்றும் முதுகுத் தண்டில் ஏற்படும் அனைத்து வலிகளும்
49. திக்குவாய்
50. சிறுநீரகக் கற்கள், பித்தப்பை கற்கள், சிறுநீர்ப் பை கற்கள்
51. காலில் இரத்த நாளங்கள் வீக்கம் அடைந்து புடைத்துக் காணப்படுதல்.

ஆக, மேற்கண்ட இந்த ஷெட்யூல்-J-யில் பட்டியலிடப்பட்டுள்ள இந்த 51 வியாதிகளுக்கும் ஆங்கில மருத்துவம் தங்கள் மருந்துகளால் வைத்தியம் அளித்து வருவது குற்றச்செயல் என்று அரசாங்கம் சட்டப்பூர்வமாக எச்சரித்த பின்பும் இந்த அனைத்து நோய்களுக்கும் சட்ட விதிகளுக்குப் புறம்பாகவும், மக்கள் நலனுக்கு எதிராகவும் ஆங்கில மருத்துவத்தால் பகிரங்கமாகவும், ஸ்பெஷலிஸ்ட்டுகள் என்ற பெயரிலும், விலையுயர்ந்த மருந்துகளைக் கொண்டும் ஆங்கில மருந்துக் கம்பெனிகளுக்கு கொள்ளை லாபங்களை வாரி வழங்கிக் கொண்டும் சட்ட விரோத காரியங்கள் நடந்து கொண்டிருக்கிறது.

இந்திய மருத்துவச் சங்கமும் (IMA) தமிழ்நாடு மெடிக்கல் கவுன்சிலும் (TMC) ஷெட்யூல் -J பற்றி பொதுமக்களுக்கு விளக்காதது ஏன்? இந்தக் குற்றச் செயல்புரியும் மருத்துவர்களை ஸ்பெஷலிஸ்ட்டுகள் என்று மக்களிடம் தவறாக அடையாளம் காட்டிக் கொண்டிருப்பதேன்? போலி மருத்துவத்தை விஞ்ஞானப் பூர்வமானது என்றும் போலி

மருத்துவர்களை ஸ்பெஷலிஸ்ட்டுகள் என்றும் மக்களிடம் முன்னிலைப்படுத்தக் காரணம் என்ன? குற்றச் செயல்களுக்கு இன்றுவரை துணைபோய்க்கொண்டிருக்கக் காரணம் என்ன?

மேற்கண்ட 51 நோய்களுக்கு மருந்துகளே ஆங்கில மருத்துவத்தில் கிடையாது என்றிருக்க சட்டத்தை பகிரங்கமாகத் தூக்கியெறிந்து விட்டு மருந்துகளைக் கொடுத்து நோயாளிகளின் உயிர்ச்சக்தியை சாகடித்துக் கொண்டிருக்கும் ஆங்கில மருத்துவம், அம்மருத்துவத்தைச் சார்ந்தவர்களை ஸ்பெஷலிஸ்ட்டுகள் என்று மக்களிடையே நடமாடவிடும் இந்தத் துரோகச் செயலை மக்களாகிய நீங்களே அரசுக்கு தெரிவியுங்கள். மருத்துவச் சங்கத்தில் கேட்பதற்கு ஆளில்லை என்ற ஒரே காரணத்தால் தான் இப்படிப்பட்ட கொடூரச் செயல் நடந்துக் கொண்டிருக்கிறது.

மக்களே! இந்திய மருத்துவச் சங்கத்தை ஆங்கிலேயர்களின் மருத்துவத்தைப் பார்க்கும் டாக்டர்கள் மட்டுமே அடங்கப்பெற்ற குழுவாகப் பாதுகாத்து வருகின்றனர். அம்மருத்துவம் நோய்களைத் தடுக்கவோ, குணப்படுத்தவோ லாயக்கற்றது என்று தீர்மானித்து சட்டமாக்கிய பின்பும் அதைப்பற்றி மக்களிடம் மூச்சுக் கூட விடவில்லை. இந்நிலை தொடர வேண்டுமா...?????



- அருண்குமார்
நெடுவை
9788045454



ஓவியம்
**நவீன் (எ) ஸ்ரீராம்**
இருள்நீக்கி

# கஜா புயல் ஓராண்டு

கஜா புயல் டெல்டாவை சூறையாடி கடந்த 15 ம் தேதியுடன் ஒரு வருடம் ஆகிவிட்டது.

கஜா என்றொரு யானை பலம் கொண்ட புயல் வர இருப்பதாக மனித அறிதல் அன்று அச்சுறுத்தியது... ஆனால் விலங்குகளின் உணர்தல் மனித அறிதலுக்கு முன்பே அதை உணர்ந்து தங்களை தற்காத்து கொண்டது.... Memes, Whatsapp status போன்ற கேளிக்கையில் சிக்கி இருந்த மனிதனின் 6 அறிவு அகந்தையிடம் ''கஜா வராண்டா'' என்ற சினிமா பாடல் அன்று சிக்கிக்கொண்டது.. அவர்களுக்கு தெரியவில்லை கஜா என்ற சீற்றத்தால் சிக்கு விழுந்து சிக்கெடுக்க முடியாமல் திக்கி முக்காட போகிறோம் என்று.

''கஜா வராண்டா'' என்ற Whatsapp status ஐ பார்த்து சிரித்தவண்ணம் உறங்கிய நம்மை அதிகாலையே கஜாவின் சிரிப்பு சத்தம் எழுப்பியது.

அது வயிறு வலிக்க சிரிக்க சிரிக்க நமக்கு வயிறு மட்டுமே வலித்தது சிரிக்க முடியவில்லை.

மனிதன் அகந்தையில் புயல் வீசிய நாள் அன்று. புயலுக்கு பின்னே அலங்கோலமாக கிடந்த நம் ஊர்களை பார்க்கும்போது... இது அலங்கோலம் அல்ல.. இதுவரை நாம் வாழ்ந்த வாழ்க்கை தான் அலங்கோலமானது என்பது புரிந்தது.

என்னுடன் இயைந்து வாழும் வாழ்கையை நீங்கள் வாழவில்லை... என்னால் அழிந்து போகும் ஒரு வாழ்வை தான் நீங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் என இயற்கை அறிவுறுத்திய நாள் அன்று.



# கண்மணியே பேசு

ஓயாத உன் பேச்சுக்கு - நான்
'உம்' சொல்லியே நாள் போச்சு;

ஓர் கணமாது செவிடனென நான்;
ஊமையென நீயிருக்கவே எண்ணம் கொண்டேன்!

ஏனோ? நீ அழைக்காத இக்கணமோ
என் மனம் ஆலமர ஊஞ்சலடி

முண்டக்கண் முழியழகி
கன்னக் குழி சிரிப்பழகி - உன்
மூச்சுக் காற்றின் ஈரம்பட்டே
என் வாழ்வில் வசந்தம் வீசுதடி.
என் கண்மணியே பேசு!

--
அபுவதமிழன்



ரோசி (ஆசிரியை)



# உறவுகளை மறந்தார்களா குழந்தைகள்?

என்ற பெரும் கேள்வி, என் மனதில் உதிக்க காரணம், இன்றைய சமூக நிலை.

இன்று பல குடும்பங்களில் குழந்தைகளோடு பழகுவதே கிடையாது. கேட்டால் நேரமில்லை. பணத்தேவையே அவசியம் என ஓடும் தாய், தந்தைகளை பார்த்து, 'குழந்தைகளை மறந்தீர்களா' என கேட்க வேண்டும். மாறாக குழந்தைகள், உறவுகளை மறந்தார்களா என கேட்கும் நிலைமையை கொண்டு வந்தது யார்? உருப்படியாக ஒருமணி நேரம் ஒதுக்கி குழந்தைகளோடு உட்கார்ந்து பேச பெற்றோருக்கு நேரம் இருக்கிறதா..?

ஐந்து வயது வரை ஆடி பாடி விளையாட வேண்டிய குழந்தைகளை மூன்று வயதிலேயே பள்ளிக்கு துரத்தி விடுகிறார்கள். கேட்டால் யார் சமாளிப்பது என்ற பதில்.

உறவுகளோடு கூட்டுக்குடும்பமாக தாத்தா, பாட்டி, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா சித்தி, அண்ணன் அக்கா என ஒரு கூட்டமாக சிரித்து பேசி விளையாட வேண்டியவர்களை தனியாக தொலைக்காட்சிகளைப் பார்க்க விடுகிறார்கள்.

தாயோடும் தந்தையோடும் உறவுகளோடும் உள்ள அன்பு பிணைப்பு அப்போதே கருக தொடங்கி விடுகிறது. குழந்தைகளா உறவுகளை தேடி செல்ல முடியும்..! உறவுகள் தான் அவர்களை அணைத்துக் கொள்ள வேண்டும்.

குழந்தைகளை வளர்க்கும்போது, பெற்றோரும் குழந்தைகளோடு, குழந்தைகளாக மாறினால் மட்டும் தான் அவர்கள் நாளைய வெற்றியாளராக உருவெடுப்பார்களே தவிர கார்ட்டூன் படமும் கைபேசி விளையாட்டும் அல்ல.

பள்ளிக்கு கிளம்பும் வரை, கைபேசியில் தான் விளையாட்டு. பள்ளியில் இருந்த வந்த பிறகு அணிந்திருக்கும் சீருடையை கூட அவிழ்ப்பதில்லை. கை, கைபேசியை நோக்கி சென்று அதன் வசப்படுத்திக் கொள்கிறது. பெற்றோரும் தன்னை தொல்லைப்படுத்தாமல் இருந்தால் சரி என்று கண்டுக்கொள்வதில்லை.

கைபேசியும், மடிக்கணினியும் பெற்றோர்களிடமிருந்தும் உறவுகளிடமிருந்தும் தனிமைப்படுத்திவிட்டது மட்டுமல்லாமல் வாழ்க்கையை இயந்திரமயமாக்கிவிட்டது. இப்படி இயந்திர மன கொண்டவர்கள் மத்தியில் உறவு எப்படி நினைவில் இருக்கும், மறந்து மரத்து தான் போகும்.

முன்பெல்லாம் மாலை நேரங்களில் வீடு அருகில் உள்ள உறவுகள் குழந்தைகள் என அனைவரும் ஒன்று கூடி இருட்டும் வரை விளையாடுவார்கள். ‘‘ஏய், அங்கே போகாதே, பாத்து விளையாடு, விழுந்து விடாதே‘‘ என்ற அக்கறையான வார்த்தைகளை வீட்டு பெரியவர்கள் கூச்சலிட்டுக் கொண்டு இருப்பார்கள்.

விளையாடி களைத்து பிறகு கூட்டமாக அமர்ந்து தாத்தா பாட்டிகள் கதை சொல்ல கேட்பார்கள். இன்று வீட்டை விட்டு வெளியே வருவதே இல்லை. பின்னர் எப்படி உறவுகள் வளரும் குழந்தைகள் மனதில்.

வாழ்க்கை என்பது அன்பாலும் உறவு முறையாலும் தியாகத்தாலும் உருவாக்கப்பட வேண்டும்.

அதை விடுத்து மற்ற ஆயிரம் வசதிகளை ஏற்படுத்தி தருவதில் இல்லை. அதனால் எதிர் காலத்தில் குழந்தைகளுக்கு ஒரு பயனுமில்லை. தனிமைப்படுத்திக் கொண்டு மன அழுத்தத்தில் தவிப்பார்கள்.

உறவுகளை மறந்தது குழந்தைகள் தானாம், கூறுகிறார்கள். இதற்கு காரணம் குழந்தைகளா பெற்றோரா?

அவர்கள் மறந்தார்களா, இல்லை அவர்களுக்கு அப்படி வாய்ப்பே கொடுக்கப்படாமல் மறுக்கப்படுகிறதா?

சிந்திக்கும் வயதில் அவர்கள் இல்லை.
சிந்திக்கும் நிலையில் பெற்றோர்கள் இல்லை..!!
இதில் ‘‘குழந்தைகள் தினம்‘‘ வாழ்த்து சொல்கிறார்கள் வெட்கமே இல்லாமல். இது குழந்தைகள் தினமா இல்லை குற்றவாளிகள் தினமா..??

--

**மனோ குணசேகரன்,**
புள்ளவராயன் குடிக்காடு.

அட்டைப்பட உதவி
VASA PHOTOGRAPHY

**வசந்தன்**
hp: 9786828973
monguski@gmail.com
vasa photography

கேட்ட விளையாட்டுப்
பொருட்களை
தரவில்லையென்றால்,
யாரைப் போலவோ எனை
எண்ணி
முகம் காட்ட மறுக்கிறாள்
தங்கை,

தவறு செய்த தம்பியின்
குறைகளை
அப்பாவிடம் சொன்ன போது,
எதிரியைப் போல் எண்ணி
கோபம் கொள்கிறான்....

சொன்ன வேலையை
செய்யவில்லையென்ற போது
துரோகியாய் பார்க்கிறான்
அண்ணன்,

தேர்வில் நல்ல மதிப்பெண்
பெறாத போது
கோபத்தில் முகம் திருப்பி
கொள்கிறார் அப்பா,

யார் யாரின் மீது
எத்தனை
கோபமாக இருந்தாலும்
எல்லோருக்கும் ஒரே மாதிரியான
அன்பை பகிர்ந்தளிக்கிறாள்...
அம்மா!

-----------------------

வயது முதிர்ந்து
நடை தளர்ந்து
உறவுகளை இழந்து
ஒரு வேளை
உணவிற்கு
கையேந்தும் யாசகர்களை
ஏளனமாய்
பார்க்கும் மனிதர்களுக்கு
தெரிவதில்லை,
நல்ல இளமையுடன்
நல்ல ஆடையுடன்
எல்லாவித உறவுகளோடும்
வசதியோடும் வாழ்ந்து
கொண்டு
அரசு அலுவலகத்தில்
நூறுக்கும்
இருநூறுக்கும் கையேந்தும்
யாசகர்களைப் பற்றி!

-----------------------

கோவிலுக்குள் நுழையும்
போது மட்டுமே,
சிலர்
மனிதர்களாக இருக்கிறார்கள்...
என
கடவுளுக்கு தெரிகிறதோ
இல்லையோ
வாசலில் அமர்ந்திருக்கும்
சில
யாசகர்களுக்கு
தெரிந்து விடுகிறது!

மு.முபாரக்
எண் 273 வாளாடி கூட்டுறவு வங்கி,
வாளாடி,
திருச்சி மாவட்டம்
கைப்பேசி: 8072600090

# நாஸ்டர்டாம் (பிரபஞ்ச புதிருக்கு விடை தேடியவர்)

பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த நாஸ்டர்டாம் தனது தீர்க்கதரிசனங்களை Les Prophecies என்னும் நூலாக வெளியிட்டுள்ளார். மனித வாழ்க்கை ஏதோ ஒரு புள்ளியிலிருந்து தொடங்கி பிறப்புக்கு முன் எவ்வாறு இல்லாதிருந்தோமோ அந்நிலையைச் சென்று அடைகிறது. கூர்ந்து கவனித்தால் ஒரு வட்டம் நிறைவடைந்திருக்கும். அது தான் வாழ்க்கை, சூன்யத்திலிருந்து உருவாகிவந்து குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு சூன்யத்துக்குள் சென்றுவிடுவது. நீங்கள் மூன்றாவது நபராக இந்த உலகைக் கவனித்து வந்தால் விசை கொடுத்து இயக்கப்படும் இயந்திரங்கள் போல மனிதர்களின் செயல்பாடுகள் இருப்பதை நீங்கள் அவதானித்து இருக்கலாம்.

அசைவற்றக் குளத்தில் சலனம் ஏற்படுத்த நாம் கல்லெறிகிறோம், கல் விழுந்த இடத்தை மையமாகக் கொண்டு அலைகள் உருவாகிறது. அலைகள் எழும்பிக் கரையைத் தொடுகிறது. கொஞ்ச நேரம் பொறுத்திருந்தோமானால் குளம் மீண்டும் சமநிலையை அடைந்திருப்பதைக் காணலாம். அணுக்களுக்கிடையே ஏற்படும் சலனத்தால் அதிர்வுகள் தோன்றுகிறது அதன் காரணமாக பூமி முதற்கொண்ட சூரிய மண்டலங்கள் உருவாகின்றன. பூமியில் உயிரினங்கள் தோன்றி அதன் சந்ததிகள் பூமியின் ஆயுட்காலம் முடியும் வரை வாழ்கின்றன. ஆயுட்காலம் என்பது அதிர்வுகள் அடங்கி பிரபஞ்சம் சமநிலையை அடையும் வரையிலான காலகட்டத்தைக் குறிக்கிறது. காலமற்ற சமநிலை பிரபஞ்சத்தில் பல்லாயிரம் ஆண்டுகள் நீடிக்கிறது. மீண்டும் சலனம் ஏற்பட்டு அதிர்வுகள் உருவாகிறது மீண்டும் பூமியை உள்ளடக்கிய சூரியமண்டலம் உருவாகிறது. பூமியில் வெறும் பாறைகள் பின்பு தாவரங்கள் அதன்பின்பு விலங்குகள் இறுதியில் மனிதர்கள் என இதற்கு முன்பு என்னென்ன நடந்ததோ அது மறுபடியும் நூலிழை வித்தியாசமின்றி நடக்கிறது.

பாரதப்போரை எடுத்துக் கொள்வோம் பூமி உருவாகி அழியும் ஒவ்வொரு முறையும் அது தொடர்ந்து நடந்து கொண்டு வருகிறது. பூமி தன் சுழற்சியை முடிக்கும் ஒவ்வொரு முறையும் இயேசு முதற்கொண்டு நான், நீங்கள் எல்லோரும் திரும்பத் திரும்ப இப்பூமியில் அதே பெயருடன் அதே தாய், தந்தையர்க்கு அதே ஊரில் மகனாகப் பிறந்து அதே வாழ்க்கையை திரும்பவும் வாழ்கிறோம். மனிதஇனம் மட்டுமல்ல டைனோசர்கள் கூட பூமி சுழற்சியின் ஒவ்வொரு முறையும் உருவாகி அழிகிறது. சுவிசேஷத்தில் உங்கள் முடிகள் கூட எண்ணப்பட்டிருக்கின்றன என்று இயேசு சொல்வதைக் காணலாம். உதாரணமாக சினிமாவை எடுத்துக் கொள்வோம் ரிலீஸ் தேதியன்று பார்த்தாலும் ஐம்பது வருடங்கள் கழித்துப் பார்த்தாலும் அந்தக் காட்சிகளில் இம்மியளவு கூட மாற்றங்கள் இருக்காது. அதுபோலத்தான் பூமியில் ஒவ்வொரு சுழற்சியிலும் முன்பு நடைபெற்ற நிகழ்வுகள் அச்சுப்பிசகாமல் மீண்டும் மீண்டும் நடக்கிறது. இப்போது எனது விளக்கம் ஓரளவு உங்களுக்கு புரிதலை ஏற்படுத்தி இருக்கும்.

சூரியன், பூமியைக் கொண்டுள்ள இப்பரவெளியின் இலக்கே சமநிலையை அடைவதுதான் அதை நோக்கித்தான் நட்சத்திரங்கள் உட்பட நாம் எல்லோரும் ஓடிக்கொண்டிருக்கிறோம். மனிதர்கள் அடையத் துடிக்கும் இந்த நிலையைத்தான் மதம் கடவுள் என்கிறது. ஒவ்வொரு சுழற்சியின் போதும் நடந்து கொண்டு வருகின்ற முக்கியமான நிகழ்வுகளை நாஸ்டர்டாம் தனது குறிப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார். சூரிய மண்டலத்திலுள்ள கிரகங்கள் அனைத்துமே இழுவிசையிலிருந்து விடுபட்டு விடுதலை அடையவே துடிக்கின்றன. மனிதனுக்கு வாழ்க்கையானது மரணத்தை நோக்கிய ஒரு பயணம் மட்டுமே. ஒட்டுமொத்த உலகமும் பூரணத்தை நோக்கி அதாவது அழிவை நோக்கியே வெகு வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது.

ஆங்கிலத்தில் Loop என்று சொல்வார்களே அதுபோல பூமியின் ஒவ்வொரு சுழற்சியிலும் சங்கிலித்தொடர் நிகழ்வுகள் தான் நடக்கின்றன. அந்த நிகழ்வுகள் நடக்காமல் போவதற்கு வாய்ப்பு இல்லவே இல்லை, எனவே நாஸ்டர்டாம் சொன்னது போல மூன்றாம் உலகப்போருக்கான விதை இந்த 2019ஆம் ஆண்டிலேயே தூவப்படலாம். அது ஒட்டுமொத்த மனிதஇனத்துக்கே பேரழிவாக முடிவதற்கும் வாய்ப்பிருக்கிறது. உலகில் தற்போது நடக்கும் நிகழ்வுகளும் நாஸ்டர்டாம் கூறுவதையே பிரதிபலிக்கின்றன.


--


## ப.மதியழகன்,

மன்னார்குடி

கைப்பேசி: 9597332952, 9095584535

mathi2134@gmail.com



**இரா. அபிநயா,**

வேளாண்மை இளங்கலை முதலாம் ஆண்டு,

நீடாமங்கலம்

பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

+91 8220567322

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal

Thiravukolmagazine